உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3066 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ மார்கழி மீ 23-உ (6—1—1935) | மலர் 20.

சாதி சடங்கொழித்தல்,

அண்ணன் பாட்டுகள்

(கடம்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்கள் இயற்றியது)

1. பண்டு பண்டென்றே—அண்ணே
பாரத ரிற்சிலர்கள்
கொண்டு திரியுகின்றார்—நம்மைக்
குருட ராக்குகின்றார்

2. சாதி யிருமாப்பால்—அண்ணே
தலைவிரித் தாடாதே
ஆதியில் நாமெல்லாம்—ஓர்
அன்னையின் பாலரண்ணே

3. பாரத ரிற்சிலரை—அண்ணே
பங்கப் படுத்தாதே
வீர முனக்குண்டேல்—அவரை
விமல ராக்கிடுவாய்

4. மதத்தின் பேராலே—அண்ணே
மக்கள் படும்பாட்டை
நிதமும் நாங்கள் கண்டே—இந்த
நீதி யுரைக்கவந்தோம்

5. சாதிக் குருக்களென்றே-தம்மைச்
சார்ந்த வரைக்கூட்டி
ஏது மறியார்பால்—அண்ணே
யேய்த்துப் பிடுங்குகின்றார்

6. சங்கர ரென்றுசொல்லும்—ஒரு
சாதிக் குருவின்பால்
பங்க மடையாதே—பணத்தை
பாதத்திற் கொட்டாதே

7 தம்பி ரான்மடத்தார்—உயர்ந்த
சாதியா ரென்பவரை
எம்பி ரானென்றே—அண்ணே
யேத்துதல் போக்கிவிடு

8. திருநா ளென்றுசொல்லிப்-பெருந்
தேரை யிழுத்திழுத்து
வருவா யத்தனையும்—அண்ணே
வாரி வழங்கிவிட்டோம்

9. யாத்திரை யென்றுசொல்லி-பணம்
அள்ளிச் செலவழித்தோம்
ஆத்தி ரப்போச்சோ?—நமக்
கறிவு வந்ததுண்டோ?

10. கண்ணாள மென்றுசொல்லி--அண்ணே
கணக்கில் லாப்பொருளை
மண்மீது கொட்டிவிட்டோம்-பின்னல்
மதிக லங்கிநின்றோம்

11. கோயில் கட்டிவைத்தோம்-குளங்
கோபுரங் கட்டிவைத்தோம்
நாயுஞ் சென்றிடலாம்—அங்கே
நாம்செல்ல லாகாதாம்

12. கோயிலுக் குள்ளேசிலர்—அண்ணே
குருக்க ளென்றுசொல்லி
வாயில்லா மக்களின்பால்—அண்ணே
வழிப்பறி செய்யுகின்றார்

13. சாலையுண் டாக்கிவைத்தோம்-கோவில்
சத்திரங் கட்டிவைத்தோம்
சோலைகள் சூழவைத்தும்-அண்ணே
சுயமதிப் பற்றுவிட்டோம்

14. சத்திரங் கட்டிவைத்தே—ஒரு
சாதிக் குணவளிக்கும்
புத்தியில் லாத்தருமம்-அண்ணே
போக்கிட வேண்டுமேநாம்

15. செத்தவர் தங்களுக்கே-அன்னம்
சேர்ப்பே னென்குகிறார்
உத்தம அண்ணனேநீ—இதன்
உண்மை யறிந்திடுவாய்

16. சடங்கு செய்தலுத்தோம்-அண்ணே
சாதி பிரித்தலுத்தோம்
மடங்கள் கட்டிவைத்தோம்-சோ
மக்கள் பெருகவைத்தோ [ம்பல்

17. சாதிக் கொருநீதி—அண்ணே
சாற்றும் மனுநூலை
நீதி நெறிப்படியே—அண்ணே
நெருப்பி லிடத்தகுமே

18. சடங் கெனும்பேயை—அண்ணே
சாக அடித்திடுவோம்
மடமை நீங்கிடுவோம்—எல்லா
மதபேத மொழித்திடுவோம்

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	0-8-0
சுதந்தரப்போர்	0-4-0
மாதர் சுதந்திரம்	0-8-0
விவாக விடுதலை	0-4-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	2-0-0
மனித உற்பவம்	0-8-0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்	0-6-0
The Right of Temple Entry (English)	1-0-0
The Crux of the Indian Problem (English)	1-0-0
உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை?	0-1-0
சாமிகளின் அடிமை	0-12-0
லோகல்போர்டு ஆக்ட் (சென்னை)	2-0-0
பகுத்தறிவு கீதம்	0-1-0
நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை	0-8-0
பெண்ணுரிமைக் கீதங்கள்	0-1-0
சமதர்மக் கீதங்கள்	0-0-6

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

இயக்கப் பாட்டுப் புத்தகங்கள்.

இப்புத்தகங்கள் சுயமரியாதை, சமதர்மம் ஆகிய கொள்கைகளை விளக்கி அறிய கருத்துக்களுடன் பாடப்பட்டவை.

சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்.

பாரதியார் நடையையும், வர்ணமெட்டுகளையும் அனுசரித்து கடம்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்களால் பாடியது. நல்ல பதிப்பு. ஈ. வெ. ராமசாமி படத்துடன்
விலை அணா 0—4—0.

சுயமரியாதைப் பாடல்கள்.

விலை அணா 0—2—0.

சமதர்மப் பாடல்கள்.

நாகைத் தோழர் வி. சாமிநாதன் அவர்களால் பாடியது.
விலை அணா 0—1—0.

சமதர்மக் கீதங்கள்,

தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால் பாடியது.
விலை அணா 0—1—0.

பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால் பாடியது.
விலை அணா 0—1—0.

மாதர் சுதந்திரம்.

இது பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்நூலில் பெண்கள் எவ்வெவ்வழிகளில் சுதந்திரம் பெறவேண்டும் என்பதும், பெண்கள் சுதந்திரத்துக்கு ஆண்கள் எவ்வளவு முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்பதும், பெண்கள் எப்படி தங்கள் சுதந்திரத்துக்கு பாடுபட வேண்டும் என்பதும் விளக்கமாக்கப்பட்டிருக்கிறது.
விலை அணா 8.

மனித உற்பவம்,

இது தோழர் சிங்காரவேலு B. A., B. L, அவர்களால் எழுதப்பட்டது. பிரபஞ்ச உற்பத்தி—ஜீவராசிகள் சூரிய சந்திரன் உற்பத்தி—மனிதர்கள் எப்படி உண்டானார்கள் என்னும் விஷயங்களும் மனிதர்கள் ஜீவன்கள் பூர்வ சரித்திரம் இன்னது என்றும், இனி ஏற்படப்போகும் மாறுதல் என்ன என்றும் சரித்திரம்—விஞ்ஞானம் ஆகியவைகளை ஆதாரமாய் கொண்ட ஆராய்ச்சி நூல்.
விலை அணா 8.

சாமிகளின் அடிமை.

இந்நூல் அமரிக்க சீர்திருத்த மாது மிஸ். மேயோ அம்மையால் எழுதப்பட்ட தேவதாசிகள் என்னும் ஆங்கிலப்புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. 170-பக்கம் கொண்டதாய் நல்ல கிளேஸ் காகிதத்தில் தெளிவானஎழுத்தில் பதிக்கப்பட்டது. ஏற்கனவே 1—8—0 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது விலை அணா 8.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஆஸ்திகமா? நாஸ்திகமா?

பிரபஞ்ச உற்பத்தி.

)o(

இதற்கு என்ன பதில்?

(கோலாலம்பூர் தோழர் ஆர். இராமநாதன்)

30-9-34ல் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி.

உலக உற்பத்தி.

உலகமும், உலகிலுள்ள ஜீவராசிகளும் கடவுளால் திடீரென்று உற்பத்தி செய்யப்பட்டதென்று பொதுவாக மக்கள் நம்புகின்றனர்—நம்புமாறு கற்பிக்கப்பட்டுள்ளனர். பரமபிதா முதலில் ஆடத்தையும், ஈவையும் படைத்ததாக கிறிஸ்து மதமும், பிரம்மா கண்மூடி திறக்கு முன் ஆயிரக்கணக்கான—லட்சக்கணக்கான உயிர்களை உற்பத்தி செய்ததாக இந்து மதமும் கூறுகின்றது. இக்கூற்றுக்களில் ஏதேனும் உண்மையிருக்கிறதா என்பதை சிறிது ஆராய்வோம்.

உலக உற்பத்தியைக்குறித்தும், அதன் விருத்தாந்தங்களைக்குறித்தும் பலர் பலவாருகக் கூறுகின்றனர். 3000-ஆண்டுகளின் சரித்திரத்தை மக்கள்சில நூற்றாண்டுகட்கு முன்னர் தான் அறிந்தனர். அதன் முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைநாம் தெரிந்துகொண்டால், உலக உற்பத்தியின் சரித்திரம் நமக்கு எளிதில்விளங்கும்.

ஆனுல் சுமார் 6000-வருடங்களுக்கு முன்னர் உலகம் திடீரென்று உற்பத்தி செய்யப்பட்டதென்று நாகரீக உலகின் ஒரு பகுதியினர் நம்புகின்றனர்; நம்புமாறு கற்பிக்கப்பட்டுள்ளனர். ஆனுல் அது சம்பந்தமாகவும், ஆஸ்திகர்களுக்குள் அபிப்பிராய பேதமில்லாமலில்லை. ஒரு சாரார் உலகம் மழைக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டதென்கின்றனர்; மற்றோர் சாரார் உலகம் கோடை காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டதென்கின்றனர். இது "ஹீப்ரு பைபிளை" ஆராய்ந்தோர் கட்சியாகும். இவ்வெண்ணம் பின்னர் சிறிது சிறிதாக மாறலாயிற்று. இவ்வெண்ணத்தை மாற்ற மதப்பிரசாரகர்கள் பெரிதும் முயன்றனர். உலகம் ஆண்டவனுல் உற்பத்தி செம்யப்பட்டதென்றும், அவன் கட்டளைக்குட்பட்டுத்தான் அனைத்தும் இயங்குகிறதென்றும் அவர்கள் பிரசாரம் செய்தனர். உலகம் பலகாலமாக இயங்கி வருகிறதென்னும் எண்ணம் மதப்பிரசாரகர்களால் புகுத்தப்பட்டது. இது மிக விநோதமான வாதமாகும். "ஒரு அறையின் இருபுறமும் இரண்டு கண்ணாடிகளை வைத்து, அறை ஆதியந்தமற்று இயங்குகிறதென்று கூறுவதையே மேற்கூறிய வாதம் ஒக்கும்" என்கிறார் H. G. வெல்ஸ். உலகம் நீண்டகாலமாக இயங்கிக்கொண்டிருக்கிறதென்றும், உலகின் கர்த்தா ஒருவர் இருக்கிறார் என்றும் கூறி பாமர மக்கள் கண்ணில் மண்ணைத் தூவலாம். ஆனால் அறிவாளி உலகை இவ்வாதத்தால் ஏமாற்ற இயலாது. நாம் தற்பொழுது வதியும் உலகம் சுமார் 7ஆயிரம் ஆண்டுகளாகத்தான் இயங்கி வருகிறதென்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

பூமி, ஆரஞ்சு வடிவமான, மத்திய ரேகையில் 8000மைல் அளவுள்ள ஓர் வடிவம். முன்னர் ஏறக்குறைய மிருகப்பிராயத்திலிருந்த மக்கள் பூமி தட்டையானதென்று நம்பியிருந்தனர். சுமார் 2,500 ஆண்டுகட்கு முன்னர் கூட பூமி உருண்டையானதென்பதை வெகுசிலரே அறிந்திருந்தனர்.

பூமி மெதுவாக சுற்றிக்கொண்டிருக்கிறது. பூமி சூரியனைச்சுற்றுகிறது. பூமி 24-மணிநேரத்திற்கொருமுறை சுற்றுகிறது. அதுவே இரவுக்கும், பகலுக்கும் காரணமாகும். இருள் கிறிஸ்தவர்கள் நினைப்பதைப் போன்று சைத்தானுடைய வேலையல்ல!

பூமிக்கடுத்தாற்போல், அதாவது 239000- மைல்களுக்கப்பாலிருக்கிறது சந்திரன். சூரியனைச்சுற்றுவது பூமியும், சந்திரனும் மாத்திரமல்ல. புதன், வெள்ளி ஆகிய கிரகங்களும் பூமியைச்சுற்றுகின்றன. அவைகளின் தூரம், பூமியிலிருந்து முறையே 3-கோடி 60-லட்சமும், 6-கோடி 70-லட்சமுமாகும். பூமிக்கருகில் செவ்வாய், வியாழன், சனி முதலிய கிரகங்களிருக்கின்றன. இவைகளெல்லாம் தானாகவே தத்தம் வேலைகளைச்செய்துகொண்டிருக்கின்றன. இவைகள் தத்தம் வேலைகளைச் செய்ய சர்வவல்லமையுள்ளதும், எங்கும் நிறைந்ததும், ஆதியந்தமற்றதும், கருணைக்கடலுமாகிய கடவுளின் உதவி சிறிதும்தேவையில்லை.

பூமியை ஒரு சிறு பந்தாகவும், அதன் மத்தியின் அளவு ஒரு இஞ்சு என்றும் வைத்துக்கொள்வோம். அப்பொழுது சூரின் 9இஞ்சு அளவுள்ளதாகவும்,பூமியிலிருந்து 323கெஜம் தூரத்திலுமிருக்கும். சந்திரன் பூமியிலிருந்து $2\frac{1}{2}$அடிக்கு அப்பாலிருக்கும். பூமிக்கும், சூரியனுக்கும் மத்தியில் புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி முதலிய கிரகங்களிருக்கும். இதற்குப்பிறகு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு ஒன்றும் நமக்குத் தென்படாது. புள்ளிக்கணக்குப்படி பூமிக்கு மிகவும் சமீபத்திலிருக்கும் நட்சத்திரம், 40,000 மைல் உயரத்திலிருக்கின்றது.

காலியான இவ்விடங்களில் பூமியைத்தவிர வேறெங்கும் உயிர்களிருப்பதாகத்தெரியவில்லை. எல்லையற்ற இடங்கள் உயிரற்றும், இறந்தும் தான் கிடக்கின்றன. ஏனெனில் அங்கு உயிர்கள் வதிய முடியாது. அங்கு உஷ்ணம் அவ்வளவு அதிகம். சூரியனின் வெளிப்புறத்தில் 40,000 டிகிரி சூடும், உட்புறத்தில் லட்சம் டிகிரி சூடுமிருக்கின்றது. நம்மால் 100டிகிரிக்கு மேற்பட்ட சூட்டைக்கூட தாங்கஇயலவில்லை அங்கனமிருக்க லட்சம் டிகிரி சூட்டை எங்கனம் தாங்குவது? அதனுல் பூமியைத்தவிர ஏனைய பாகங்களெல்லாம் உயிரற்றுக்கிடக்கின்றன. நிலைமை இவ்வாறிருக்க ஆஸ்திகர்கள் பெருமையாகப் பேசும் வைகுண்டத்திற்கும், பரலோகத்திற்கும், கடவுளுக்கும், கடவுள்களுக்கும் எங்கு இடமிருக்கிறதோ—அறியேன்.

ஆகாயத்தில் அதிக உயரம் பறந்திருப்பவர்கள் சுமார் 5மைல் உயரச் சென்றுள்ளனர். பலூன்களில், மிகவும் கஷ்டத்துடன் சுமார் 8மைல் உயரச்சென்றுள்ளனர். எந்தப்பட்சியும் ஐந்து மைல் உயரத்துக்கு மேல் பறக்க முடியாது. தோழர்களே ஆஸ்திகர்கள் சுயநலங்கருதி கற்பித்துள்ள பல விஷயங்களின் யோக்கியதைகளை தற்பொழுது ஒருவாறு தெரிந்துகொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன்.

உயிர்களின் உற்பத்தி.

சூரியன், பூமி, கிரகங்கள் முதலியன சுழன்று கொண்டிருக்கும் பொருள்களாயிருந்திருக்கலாம். டெலஸ்கோப்பைக்கொண்டு வானை நோக்கின், வானில் பிரகாசமான சுரியுள்ள மேகங்களைக் காண்கிறோம். அவைகள் சுழன்று கொண்டிருக்கின்றன. சூரியனும், கிரகங்களும் ஒரு காலத்தில் சுரியுள்ள பொருளாயிருந்திருக்க வேண்டுமென்றும், காலக்கிரமத்தில் அவைகள் தற்பொழுதைய நிலையை அடைந்திருக்க வேண்டுமென்றும் வான சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

உலக சரித்திரத்தின் ஆரம்பத்திற்கு நாம் போனால் அக்கினிக்குழம்பு எங்கும்பெருகியோடும் காட்சிகளைகாண்கிறோம். எங்கும் தண்ணீர் தென்படவில்லை. ஏனெனில் அவைகளெல்லாம் உஷ்ணத்தால் உறிஞ்சப்பட்டுவிட்டன. இவ்வுஷ்ணத்தின் வன்மை அளவிடற்பாலது அன்று அது கற்களையும் உருக்கும் வன்மை பொருந்தியது.

லட்சக்கணக்கான வருடங்கள் செல்லச்செல்ல இப்பொருள்கள் சிறிது சிறிதாக தம் வன்மையை இழக்கின்றன. வானில் நிறைந்துள்ள நீராவி மழையாகப் பொழிகின்றது; சூரியனும், சந்திரனும் சிறிதாய்க் கொண்டும், தூரத்திற்குச் சென்று கொண்டுமிருக்கின்றன. எனவே அவைகளின் உஷ்ணம் அவ்வளவாக பூமியில் தாக்குவதில்லை. சூரியனின் உஷ்ணம் சிறிது சிறிதாகக் குறைகின்றது. சூரியன் பூமியிலிருந்து மிகவும் தூரத்திற்குச் சென்று கொண்டேயிருந்ததால், அதன் உஷ்ணம் சிறிது சிறிதாக பூமியில் குறைந்தது. சூரியன் உஷ்ணம் குறைவதாலும், மழை பெய்வதாலும் பூமி சிறிது குளிர்ச்சியடைகின்றது. அதோடு சூரியனுடைய உஷ்ணம் பூமியை அதிகமாகத் தாக்காதவாறு சந்திரனும் சிறிது உதவி புரிகின்றது. சந்திரன் சிறிதாய் விட்டதால், அதன் கிரணங்கள் தண்ணனியாயிருக்கின்றன. எனவே அது பௌர்ணமிகள் மூலமாகவும், கிரகணங்கள் மூலமாகவும் சூரியனின் வெப்பத்தை சிறிது குறைக்கின்றது.

இங்ஙனமாக காலமாறுபட்டால், மிக மெதுவாக மாற்றமடைந்து, பூமி நாம் இன்று காணும்நிலையை அடைந்துள்ளது. பல லட்ச வருடங்களுக்குப்பிறகுதான் பூமியில் உயிர்கள் தோன்றியிருக்கின்றன. உயிர்கள் தோன்றும் முன் நாம் உலகைக் கண்டிருந்தால்—அத்தகைய உலகை நம் மனக்கண் முன் நாம் வருவித்துக் கொண்டால்—நாம் பண்படுத்தாததும், பாறைகள் நிறைந்ததும், பெரும்புயல் அடிப்பதும், இன்றைய உலகம் கண்டிராததும், உயிர்கள் ஜீவிக்க முடியாததுமான அவ்வளவு வெப்பத்தையும், பாறைகளையும் இடித்துத் தகர்க்கும் வன்மையுடைய மழையையும், கடுமையான மேகங்களுக்கிடையில் பெரிய சூரியனையும், இன்னும் பல பயங்கரக் காட்சிகளையும் காண்போம்.

உலகிற்கு வயது சென்றது; வருடங்கள் கடந்தது; சூரியன் அதிக தூரத்திலும், வன்மை குறைந்ததுமாயிற்று. மழை, புயல் ஆகியவைகளின் வன்மை குறைந்தது. ஆனுல் உலகில் எவ்வித உயிருமில்லை; கடலுக்கு உயிரில்லை; பாறைகளுக்குயிரில்லை;எதற்கும் உயிரில்லை.

முதன் முதல் உலகில் தோன்றிய பிராணி சிறு மீனாகும். அதற்குப் பிறகு கடல் தேள்கள் உற்பத்தியாயின. இவைகளெல்லாம் சிறு பிராணிகள். இவைகள் தண்ணீரில் உற்பத்தியாயின. ஆனால் அக்காலங்களில் தரையில் செடிகளோ, பிராணி

களோ இல்லை.

உலகில் எந்த ஜீவராசிகளும் திடீரென்று தோன்றவில்லை. எல்லாம் சிறிது சிறிதாக காலமாறுபாட்டால் ஏற்பட்டதாகும். நாட்கள் செல்லச் செல்ல ஜீவராசிகள் பல மாற்றங்களையும், பல உருவங்களையும், அபிவிருத்திகளையும் அடைந்துள்ளது.

உயிர் ஜீவ சக்தியுடையது. அவை ஓர் எல்லையுடையதல்ல. அதனிடத்து இரண்டு சக்திகள் நிறைந்திருக்கின்றன. அவை மற்ற பொருள்களை தன்னிடத்துஇழுத்துக்கொள்ளவும், அதை எவ்வித உதவியுமின்றி மீண்டும் உற்பத்தி செய்யவும் உயிர்களுக்கு வன்மையுண்டு. அவை உண்கின்றன; உணவளிக்கின்றன. அவை வேறு உயிர்களை உற்பத்திசெய்யும். அவை தம் உருவைப் போன்றும், தம் உருவிலிருந்து சிறிது மாறுபட்ட உருவங்களையும் உற்பத்தி செய்ய முடியும்.

ஒரு மனிதனுக்கும், அவன் குழந்தைக்கும் முகத்தோற்றத்தில் மாற்றமில்லாமலிருக்கின்றன; ஆனால் மற்றொரு மனிதன், தன் குடும்பத்திலிருந்தும், தன் பெற்றோர்களிலிருந்தும் மாறுபட்ட முகத்தோற்றத்தையுடைவனாயிருக்கிறான். இதுதான் உயிர்களின் உருவ மாறுபாட்டிற்கும் ஏனையகாரணங்களுக்கும் தக்கஉதாரணம்.

காலமாறுபாட்டால் சில உயிர்கள் உலகில் ஜீவிக்க இயலாது போகின்றது. எனவே புது உலகிற்கு அவைகள் தங்களை தயார் செய்து கொள்கின்றன. புது உலகிற்கொவ்வ அவைகள் உருவிலும், செயலிலும் மாற்றமடைகின்றன. இங்ஙனமாக ஜீவராசிகள் காலம் செல்லச் செல்ல உருவில் மாறுபடுகின்றன.

உயிர்கள் முதன் முதல் சேற்றிலும்,, மணலிலும், பின்னர் தண்ணீரிலும் உற்பத்தியாயிற்றென்பது விஞ்ஞான பண்டிதர்கள் முடிவாகும்.

பல காலம் உலகில் சிறு புழுக்கள் தான் ஜீவித்தன. அதிலிருந்து மீன்கள் உற்பத்தியாயின. இக்காலத்திலும் மண் உயிரற்றிருந்தன. தண்ணீரில் மாத்திரம்தான் ஜீவராசிகள் வசித்து வந்தன.

பின்னர்உலகின் நிலை சிறிதுசிறிதாக மாற முற்பட்டன. உலகின் சீதோஷ்ண ஸ்திதி சிறிது சிறிதாக மாறலாயிற்று.. இந்த நிலையில்—கடல் பரந்தும், ஆழமில்லாமலுமிருந்த காலத்தில்—கடலிலிருந்து ஜீவராசிகள் நிலத்திற்கு வந்தன. கடலிலிருந்த பிராணிகள் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து, அவைகள் நிலத்திற்குச் செல்ல நீண்ட காலம் முயன்று கொண்டிருந்தன. இறுதியில் அவை கள் வெற்றி பெற்றன.

பின்னர் செடிகள் உற்பத்தியாயின. இம் மரங்களினுதவியால்—நாட்கள் செல்லச் செல்ல பல ஜீவராசிகள் தண்ணீரிலிருந்து நிலத்திற்கு வந்தன. அதில் தேள், ஆதி புழுக்கள், நண்டு, கடல் நட்டுவாக்களி முதலியவைகளிருந்தன. அவைகள் சிலந்திப் பூச்சியாகவும், தேள்களாகவும் மாறின. அதன் பிறகு—நீண்ட காலத்திற்குப் பிறகு இன்னும் பல பிராணிகள் தோன்றின.

ஊர்வன ,காலம் செல்லச் செல்ல நிலத்தில் விருத்தியடைந்தன. இவைகள் ஒன்றை ஒன்று தாக்கவும், வதைக்கவும் ஆரம்பித்தன. எனவே சில, எவ்வித பிராணியும் வசிக்காத, குளிரான இடங்களில் குடியேறின.

ஊர்வன சாதாரணமாக தங்கள் முட்டைகளை அதிகமாகக்கவனிப்பதில்லை. அவைகள் முட்டை யிட்டதும், அம் முட்டைகளை சூரிய வெப்பத்திற்கும், பருவ காலத்திற்கும் விட்டு விட்டு வாளாவிருந்து விடும். ஆனால் புது இடத்தில் குடியேறின பிராணிகள் தங்கள் முட்டைகளில் சிரத்தை கொள்ள ஆரம்பித்தன. அவைகள் தங்கள் முட்டைகளைப் பாதுகாக்கவும், தங்கள் உடம்பால் முட்டைகளுக்கு சூடு கொடுக்கவும் முற்பட்டன. இம் மாற்றத்தால் ஆதி பக்ஷிகள் உற்பத்தியாயின. ஆதி பக்ஷிகள் மீன்களைத் தின்று ஜீவித்து வந்தன.

அதற்குப் பிறகு—அதாவது பக்ஷிகள் காலத்திலேயே முலையுண்ணும் ஜீவ வர்க்கங்களும் உற்பத்தியாயின.

பின்னர் குரங்கு, வாலில்லாக் குரங்கு முதலியன உற்பத்தியாயின. ஆதியில், அதாவது 4 கோடி ஆண்டுகட்கு முன்னர், அவைகள் சிறிதும் விருத்தியற்றிருந்தன.

காலச் சக்கரம் அதி வேகமாகச்சுழன்றன! அதன் சுழற்சியின் வேகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. உலகின் முதல் காண்டம் முற்றுப் பெற்றது. ஊர்வனவின் காண்டம் கழிந்தது; யானை, மான், நரி, புலி முதலிய பிராணிகள் உலக அரங்கத்தில் தோன்றின; உலகிலே பல மாற்றங்கள்! சுமார் 50,000 ஆண்டுகட்கு முன்னர் தான் உலகில் மனிதனைப்போன்ற பிராணிகள் தோன்றின.

இக்காலத்திலிருந்து தான் மனிதனைப் போன்ற அவயவங்களையுடைய பிராணிகள் உலகில் வாழ்ந்ததாகப் போதிய ஆதாரங்களுள்ளன. கையையுடைய பிராணிகளால் செதுக்கப்பட்ட பல கற்கள் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் கற்களைத்தான் "இயோளத்ஸ்" (Eoliahs) அதாவது "உதயக் கற்கள்" என்கின்றனர் சரித்திராசிரியர்கள். இன்னும் சொவாவில் இதே காலத்திய ஆதி மனிதனின் பற்கள், மூளை முதலியனகண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல இடங்களிலிருந்து இத்தகைய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ் வாதி மனிதர்களை "இயோன்த்ரோபஸ்" (Eoanthropns) என்றழைக்கின்றனர் விஞ்ஞானிகள்.

இதற்குப் பிறகு தோன்றிய மனித உருத் தாங்கியவர்களை "நீன்டர் தாலர்" (Neanderthaler) ரூடேஷியன் மனிதன்" Rhodesian Man என்கின்றனர் விஞ்ஞான பண்டிதர்கள். ரூடேஷியன் மனிதன் சிலமாற்றமடைந்து, இன்று உலகில் வாழும் மனிதப் பருவமடைந்தான்.

ஆகவே காலமாறுபாட்டாலும், நிர்பந்தத்தாலும் தான் உயிர்கள் சிறிது சிறிதாக மாற்றமடைந்தன. ஈண்டு எனது வாதத்திற்கு அனுகூலமாயிருக்கும் கீழ்க்காணும் உதாரணம்.

"சில ஆண்டுகட்குமுன்னர் டால்மானியாவில் சிலர் வசித்து வந்தனர் அவர்கள் உடற் கட்டிலும், புத்தியிலும் ஆதி மனிதர்களை ஒத்திருந்தனர். பல்லாண்டுகட்கு முன்னர் இம் மனிதர்கள் உலகிலிருந்து ஒதுக்கப்பட்டனர். அவர்களுக்கு உலகத்தொடர் பற்றுப்போயிற்று. அவர்கள் மிருகங்களைப் போன்று வாழ்ந்து வந்தனர். ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் அவர்களைக் கண்டுபிடிக்கும்பொழுது. அவர்கள் மனிதக் குரங்குகளைப் போன்று வாழ்ந்து வந்தனர்"

இவை நமக்கு எதை அறிவுறுத்துகின்றன? உயிர்கள் அபிவிருத்தியடையவேண்டுமாயின் முன்னேற்றமடைய வேண்டுமாயின், தேவை அதிகரிக்க வேண்டும். தேவையும், நிர்ப்பந்தமும்அதிகரிக்கும் பொழுது தான் மனிதன் பல அபாரமான காரியங்கள் செய்கின்றான். அபிவிருத்திக்குத்தேவை முக்கிய காரணம்.

தோழர்களே!

பிரபஞ்ச சரித்திரத்தையும், பிரபஞ்சத்தில் உயிர்கள் தோன்றின விதத்தையும் ஒருவாறு மேலே விளக்கியுள்ளேன். அவைகளை இன்னும் விரிவாக ஆராய இச்சிறு கட்டுரை இடந்தராது. ஆயினும் கடவுள் உலகையும், உலகிலுள்ள ஜீவராசிகளையும் உற்பத்தி செய்தாரென்றும் ஆஸ்திகர்களின் வாதத்தை முறியடிக்க மேற்கூறிய உதாரணங்கள் போதுமானது. தற்பொழுது ஆஸ்திகர்கள் எங்ஙனம் தாங்கள் சுய நலம் கருதிபற்பல கதைகளைக்கற்பித்து, மக்களைஏமாற்றிவந்தார்களென்பது ஒரு வாறு விளங்கும். ஆனால் இத்தகைய கதைகளைக்கற்பித்ததற்குக் காரணங்களில்லாமலில்லை. ஆஸ்திகர்களின் (சோம்பேறித் தனமே அதற்குக்காரணமாகும். ஏனெனில்அவர்கள் உழைத்துண்ண விரும்பாதவர்கள்—ஆனால் உலக இன்ப மனைத்தையும் நுகர ஆசைப்படுபவர்கள். எனவே பல சூழ்ச்சிகளைக்கையாண்டார்கள். ஏழைமக்களை—பாமரமக்களை—கடவுள்பெயராலும், மதத்தின்பெயராலும் கசக்கிப்பிழிந்து, அம் மக்கள் இரத்தத்தை இடை விடாது உறிஞ்சி வருகின்றார்கள். ஏழைமக்கள் இரவு பகல் ஓய்வின்றி உழைத்தால் அவர்கள் உடலிலிருந்து கசிந்து விழும் முத்து முத்தானவெயர்வை நீரில் நீந்திக்குதிக்கின்றார் ஆஸ்திகர்கள். பாட்டாளிகளின் கஷ்டக் கண்ணீரில் வாழும் ஆஸ்திகர்கள் இன்பமாளிகை கட்டுகின்றனர். பாமரமக்கள் புற்றீசல் போன்று மதம்—கடவுள் ஆகியவைகளுக்கிரையாகி மடிந்துவர, ஆஸ்திகர்கள் தின்று கொழுத்து வருகின்றனர் தங்கள் பிழைப்புக்கு கடவுள்என்றதரகனையும் உற்பத்தி செய்து கொண்டனர். "அனைத்தும் அவன் செய"லென்னும் பல்லவியும் இயற்றினர். படைத்தல், காத்தல், அழித்தல்ஆகியவைகள் அவனை (ஆண்டவனை)ச்சேர்ந்ததென்று கூறி, பாமரமக்களைஏமாற்றினர். ஆனால் அக்காலம் இன்று மலையேறி விட்டது. இது விஞ்ஞான உலகம். லெனின் காட்டிய வழியிலே, மார்க்சின் சித்தாந்தத்திலே இங்கர்சாலின் உபதேசித்திலே, ப்ராட்லாவின் கொள்கையிலே, வால்டேயரின்வழியிலேபோய்க்கொண்டிருக்கிறது இன்றைய விழிப்படைந்த உலகம்.

நண்பரே! இவைகளுக்கு நீங்கள் என்ன மறுமொழி கூறப்போகின்றீர்கள்?

(தொடரும்)

ஒரு நற்செய்தி,

ஆணுக்குப் பெண் அடிமை அல்ல.

சமீபத்தில் Church of England Bishop Weston அவர்கள், "கலியாணம் செய்துகொள்ளும் ஆண் பெண்கள் சமத்துவ வாழ்க்கை வாழ வாக்குறுதிகள் கொடுத்துக் கொள்ள வேண்டுமேயன்றி ஆணுக்குப்பெண் கீழ்படிவதாய் Church of England கிறிஸ்தவர்கள் தொன்று தொட்டுக் கொடுத்து வருகிற வாக்குறுதி செய்வது என்பது மனிதத்தன்மைக்கும், நாகரீகத்திற்கும், அறிவுக்கும் ஒத்ததல்ல" என்று கூறியிருக்கிறார். இந்த போற்றற்குரிய பொன் மொழிகளை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். இந்தப்பழங்குறையை நாம் அநேகந்தரம் சு. ம. கல்யாணங்களிலும், மேடைகளிலும் கண்டித்து ஆண் பெண் சமத்துவம் என்பதை வற்புறுத்தியிருக்கிறோம். இவ்வளவு காலம் பொருத்தாவது இப்பொழுது, பொறுப்பான பதவியிலிருக்கும் பிஷப் வெஸ்டன் அவர்கள் நமது அபிப்பிராயத்தை மதச்சார்பாக வெளியிட்டதற்கு மகிழ்கிறோம். இப்படி அவர் கூறியது தவறென்று அவரைச் குறை கூறியிருக்கும் நல்ல சமாரியான (Good samaritan) என்னும் குறுகிய மனப்பான்மையுடைய ஒரு கிறிஸ்தவப்பத்திரிகாசிரியரை பழைய உலகத்துக்குப்போகும்படி நாம் வேண்டிக் கொள்ளுகிறோம் என டி. வி. டேவிஸ் பி.ஏ. எழுதுகிறார்.

திடமான தலைவர்

"ஒரு கட்டிடம் உறுதியுடனிருக்க வேண்டின் அஸ்திவாரம் உறுதியாய் அமைத்திருக்கவேண்டும். இதற்கு கட்டிட ஞானம் நிரம்பிய இஞ்சினீயர்களின் உதவியின்றியமையாததாகும். அஃதேபோல் ரஷிய சமதர்மக் கட்டிடத்தை அமைக்க ஒரு நிபுணத்துவம் வாய்ந்த இஞ்சினீயர் போன்ற ஒரு பொருப்பு வாய்ந்த, திடமான தலைவர் ஒருவர் அவசியம் வேண்டியிருந்தது. அந்தத் தலைவர்பொதுமக்களின் உதவியால் சமதர்ம அஸ்திவாரத்தைப் போட்டு விடுத்தனர். மக்கள் அஸ்திவாரத்தின் மேல் சமதர்மக் கட்டிடத்தை எழுப்பி வருகின்றனர். இதில் கண்ணுங்கருத்துமாக ரஷியத் தொழிலாளர் கஷ்டப்பட்டு வேலை செய்து வருவதோடு, என்னமோ, ஏதோ, என்று பராமரிப்புடனிருக்கும் ஏனைய தொழிலாளரையும் தட்டி எழுப்பி எல்லோருமாக சமதர்மக் கட்டிட வேலையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

''சாதிக்க முடியாதவை'' என்று உலகம் சொல்லிவந்தபலவற்றையும் ரஷியப் புரட்சி 'சாதிக்க முடியும்' என்று நிரூபித்துக் காட்டுகிறது.

ரஷியா பொருளாதார சமத்வதுங்கொண்ட அரசாட்சியை ஸ்தாபித்திருப்பதோடு பொருளாதாரத்தில் அபார முற்போக்கையும் பெற்றிருக்கிறது. 'பொருளாதார சமத்துவத்தை ஏற்படுதநினல் போட்டி இல்லாமல் போகிறது. ஆகவே மக்களிடம் வேலைசெய்யும் உற்சாகம் குறைந்துவிடும். அதோடு அவர்களிடம் அசட்டுத்தனம் பெருகிவிடும். இதன் பயனாக பொருள் அபிவிருத்தியையோ, அல்லது வாழ்க்கை உயர்வையோ மருந்துக்காயினும் காணமுடியாமல் போய்விடும். ஆகவே பொதுவுடமையினால் தீமையே ஏற்படும்' என்று சில மேதாவிகள் அபிப்பிராயப்பட்டனர். அப்படிப் பட்டவர்களுக்குப்புத்திபுகட்டும் வகையில் அவர்களின் சாக்குருவி அபிப்பிராயங்களுக்கு நேர் விரோதமாக, போட்டியுடனும, உற்சாகத்துடனும், பொருள் அபிவிருத்தியுடனும், வாழ்க்கை உயர்வுடனும் ரஷியர் வேலை செய்து பிரத்தியட்சமாகக்காட்டுகிறது.

ரஷியா உலகினுக்கு நிரூபித்துக் காட்டிய மற்றொரு விஷயம என்னவென்றால் முதலாளிநாடுகளும், பொதுவுடமை (தொழிலாளி) நாடுகளும் உலகில் அடுத்தடுத்து இருக்க முடியும் என்பதாகும். புரட்சி தோன்றிய அன்னாள்முதல இன்னாள்வரையும் ரஷியா தன்னுடைய உள்நாட்டு அபிவிருத்தி விஷயங்களிலேயே தன்னுடைய முழு கவனத்தையும்,உழைப்பையும் செலுத்தி வருகிறது. இன்று அது அசைக்க முடியாததொரு அரசாங்கத்தை ஸ்தாபித்திருக்கிறது.

ரஷியாவின் பரிசீலனை.

மதம் விரட்டப்பட்டது

இந்தியாவிற்குப் பாடம்

புரபசர் முக்கர்ஜீ உபன்யாசம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

(C. R. D..)

உலக சமாதான ஆசிரியர்.

ரஷ்யா மற்ற தேசங்களோடு சண்டை செய்யப் பிரியப்படவில்லை. சமாதானம் அதன் முக்கியக் கொள்கையாகும்.

ஆயுத பரிகரணத்தைப்பற்றிரஷியா கூறியிருக்கும்அபிப்பிராயங்களையும், அதற்கான பரிகாரங்களையும் கவனித்தவர்களுக்கு ரஷியா எதை வேண்டுமென்கிறது என்பது விளங்கும்.

ரஷியா பூரண சமாதான விருப்பம் கொண்டது என்பதை நிரூபிக்க ஒரு சிறிய உதாரணம் கூறுகிறேன். ரஷியாவின் 1931-ம் வருஷத்திய வரவு சிலவு கணக்கை கவனியுங்கள். மொத்த சிலவில் 100-க்கு 18-க்கு மேல் மக்களின் கல்வி முற்போக்கிற்காக ஒதுக்கியிருக்கிறது. 100-க்கு 4 விகிதமே இராணுவத்திற்காகச்செலவழித்திருக்கிறது. உலகிலுள்ள எந்த தேசமாவது இவ்விதம் (அதாவது மக்களின் கல்விக்காக வருவாயின் பெரும் பகுதியையும், தேசப் பாதுகாப்பிற்காக மிகச்சிறிய தொகையையும்) சிலவு செய்திருக்கிறதென்று விரல் விட்டுச் சொல்ல முடியுமா?

"விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம்" என்னும் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டது பிரான்ஸ்ப்புரட்சி. ஆனால் ரஷியப் புரட்சி அக்கொள்கைகளை, "சகோதரத்துவம், சமதர்மம், விடுதலை" என்று தலைகீழாகமாற்றி முதலில் சகோதரத்துவம்,சமத்துவத்திற்காகப்போராடியிருககிறது. அதன் பயனாக "விடுதலை" என்பது தானாகவே தோன்றி விட்டதைக் காணலாம்.

இந்தியாவிற்குப் பாடம்

"ரஷியாவின்பரிசோதனையிலிருக்கும் அரசியல் முறைகள் இந்தியாவிற்கு ஒத்துக்கொள்ளாததாயிருந்தபோதிலும், ரஷியாவின் தொழில் முற்போக்கு, விவசாய அபிவிருத்தி ஆகிய இத்துரைகளிலிருந்து பல அரிய விஷயங்களை இந்தியா கொள்ள வேண்டியது அவசியம். இன்று நம் தேசத்தில் கையாளப்படும் விவசாய முறைகளைசற்று கவனியுங்கள். காட்டுமிராண்டி காலத்து கலப்பை முதலியவைகளை இந்த இருபதாம் நூற்றாண்டில் விட்டிருக்கிறோமா? எந்த விதத்திலாவது நாம் புதிய கருவிகளைக்கையாளுகிறோமா? இவ்வித தாத்தா காலத்துக்கருவிகளைக் கொண்டு வேலை செய்து-எந்தக்காலத்தில் தான் முன்னுக்கு வருவது? எவ்வளவு காலம் வீணாகிறது? எவ்வளவு உழைப்பு நஷ்டமாகிறது? அவைகளுக்குப் பதிலாக இயந்திரங்களைக் கொண்டு எவ்வளவு கொஞ்ச உழைப்பில் எவ்வளவு அதிக பலனை அடையலாம் என்பதைக்கவனித்துப் பாருங்கள். அதனால் எவ்வளவு காலம் மிச்சப்படுகிறது. அக் காலத்தைக்கொண்டு மனித முற்போக்கிற்கான மற்ற துறைகளில் செலவிடக் கூடுமல்லவா? இன்று உலகமும், அதிலுள்ள மற்ற தேசங்கள் யாவும் என்ன வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கின்றன தெரியுமா? உலகம் பயங்காமான வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்க இந்தியா இன்னும் அசட்டுத்தனமாயிருந்து கொண்டு பழைய செல்லரித்த புராணக் குப்பைகளை புரட்டிப்பார்த்துக்கொண்டிருக்கிறதென்றால் இதற்கு என்ன சொல்வது? இந்த அளவில் இந்தியா இருந்தால் ரஷியா இன்று அடைந்துள்ள முற்போக்கை அடைய எத்தனை நூற்றாண்டுகள்பிடிக்கும் என்பதையோசியுங்கள். நீங்கள் காலத்தையொட்டி நடக்க வேண்டும். காலத்தை யொட்டி நடக்க வேண்டுமானல் சமதர்மப் பொருளாதார முற்போக்குக்கொள்கைகளை நீங்கள் ஆதரிக்க வேண்டும். பாமர மக்களின் முன்னேற்றக் கொள்கைகளைக்கொண்ட ஒரு திடமான கக்ஷி ஒன்று ஏற்பட வேண்டும். அக்கக்ஷியின் கட்டளைப்படி மக்கள் யாவரும் நடப்பதாயிருக்க வேண்டும். அக்கக்ஷியின் சமூகப் பொருளாதாத் திட்டங்கள் சமதர்மத்தையும், பொது மக்களின் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தியாவில் சமூகத் துரையிலும், பொருளாதாரத் துரையிலும் புரட்சியும், புனருத்தாரணங்களும் ஏற்பட வேண்டும். இல்லையேல் அன்னியர்களின் தொல்லைக்கும் புரோகிதர்களின் தொல்லைக்கும் என்றென்றும் ஆளாகிக் கஷ்டப்பட்டுக்கொண்டு தலை விதி என்ற சமாதானத்தோடு இருக்க வேண்டியதே.

பழைமையைப்புதைக்கும்வேலையை தேசீயவேலையாக இந்தியர் கொள்ள வேண்டும். இந்த வேலையில் ஈடுபடுகிறவர்கள் தங்கள் பட்டம், பதவி, கௌரவங்கள் யாவற்றையும் தியாகம் செய்யத் தயாராயிருக்க வேண்டும். அதோடு மனித முற்போக்கிற்கு தடை கல்லாக, மதமோ, கடவுளோ எது நின்றாலும் அதை எதிர்த்துப் போராட தைரியமும் அஞ்சா நெஞ்சமும் படைத்திருக்க வேண்டும்."

அமெரிக்காவின் செல்வ நிலை.

குபேரநாடு! 2கோடிபேர்பட்டினி!!

அமெரிக்காவின் செல்வ நிலை வருமாறு:—

1,000,000,000 ஏக்கர் விவசாய நிலங்கள்.
500,000,000 ஏக்கர் காடுகள்.
100,000,000 ஏக்கர் இரும்பு செம்பு, நிலக்கரி ஆகிய உலோக நிலங்கள்.
34,000,000 ஏக்கர் நதிகளும் காயல்களும்.
100,000,000 ஏக்கர் நகரப் பிரதேசங்கள்.
316,000 எண்ணெய் கிணறுகள்.
6,500,000 பண்ணைகள்.
185,000,000 குதிரைகள், ஆடு மாடுகள் முதலிய கன்று காலிகள்.
500,000,000 நாட்டுப்பறவைகள்.
16,000 நகரங்கள்.
37,000,000 கட்டிடங்கள், பள்ளிக்கூடங்கள், புஸ்தகசாலை தொழிற்சாலைகள் கோவில்கள்,ஆஸ்பத்திரிகள்,வீடுகள் முதலியன.
127,000,000 நீராவியந்திரங்கள், மோட்டார்கள் முதலியன.
700,000,000 குதிரை வேகங் கொண்ட இயந்திரங்கள்.
2,000,000 மைல் கிராம ரோடுகள்.
750,000 மைல் நகா ரோடுகள்.
250,000 மைல் ரெயில் ரோடுகள்
59,000 மைல் கப்பல் போக்குவரத்துப் பாதைகள்.
736,000 குழாய்கள்
160,000 மைல மின்சாரக் கம்பிகள்.
88,000,000 மைல் தந்தி, டெலிபோன் கம்பிகள்.

"இது போல் இவ்வளவு மகத்தானஇயற்கை வளங்களும், குதிரை வேகம் படைத்த இயந்திரங்களும் பின்னல் சடை போன்ற போக்குவரத்துப் பாதைகளும் வியாபாரத்திற்குரிய சாதனங்களும் கொண்ட வேறு எந்த நாடு இருக்கின்றது? குடிஅரசு நாடாய் இருந்தும், 12½ கோடி மக்கள் இந்த அளப்பரிய செல்வங்களை அனுபவிப்பதற்குரியவர்களாயிருப்பினும அவர்களில் ஒன்று பாதிக்கு மேல் வறுமையில் இது எழுதுகின்ற இந்நேரத்தில் கிடந்துழல்கின்றார்கள்"

இது யாருடை செயல் "தமிழன்"

சுயமரியாதைச்சங்கம், கோலாலம்பூர்.

தோழர் அ. இராகவன் அவர்கள் பிரசங்கம்.

மேற்கண்ட சங்கத்தின் பொதுக் கூட்டம் ஞாயிற்றுக் கிழமை 16-12-34-ல் பிற்பகல் 3 மணிக்குக் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் மலாக்கா, தோழர் சிதம்பரம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது.

பாரதமித்திரன் ஆசிரியர் தோழர் ஆர். இராமநாதன் அவர்கள் தோழர் சிதம்பரம் அவர்களைப்பொது ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி சில வார்த்தைகள் பேசினர்.

தோழர் சிதம்பரம் அவர்கள் அக்கிராசனமேற்றுப் பேசியதின் சாராம்சம் பின் வருமாறு:—

சகோதர! சகோதரிகளே!!

இன்று இக்கூட்டத்திற்கு எம்மைத் தலைமை வகிக்கும்படி அழைத்த கோலாலம்பூர் சுயமரியாதை சங்கத்தார்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நான் சொந்த விஷயமாகக் கோலம்பூருக்கு வந்தேன். இக்கூட்டம்நடைபெறுமென்னும்நோக்கமில்லாதிருந்தாலும் சு. ம. சங்கம் எம்மை நிறுத்தி விட்டது ஆகையால் தான் என் தோழியை அழைத்து வரச்சந்தர்ப்பமில்லை. நாம் இந்நாட்டிற்குப் பிழைப்பான் வேண்டியும், பணம் சம்பாதிப்பான் வேண்டியும் வந்தோமென்றாலும் நமது மூடப் பழக்க வழக்கங்களால் இங்கு வந்தும் பணத்தை விரையமாக்கி விட்டு வறுமையாளர்களாக ஆய் விடுகிறோம். சு. ம. காரர்களாகிய தன் மதிப்பியக்கத்தார் பண்டை காலத்திய மூளைக் குழப்பமுள்ள விஷயங்களை விட்டு விட்டுப் பகுத்தறிவென்னும்மார்க்கத்தில் ஈடுபட்டு உழைக்கச் சொல்லி வருவதுடன் குடி அரசுப் பத்திரிகை மூலமாகப் பிரச்சாரம் செய்தும் வந்தார்கள். கடவுள் இல்லை என்று சொல்லவில்லை கடவுளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றுதான் சொல்லுகிறது. தோழர்களே! எமது முடிவுரையில் பல காரணங்களை எடுத்துச் சொல்லுகிறேன், இப்பொழுது தோழர் ஜெகோப்ஸியோன் அம்மாள் அவர்களை "சீர்திருத்தம்" என்பதைப்பற்றிப் பேசும்படியாகக் கேட்டுக் கொள்கிறேனென்று சொல்லியமர்ந்தார்.

தோழர் ஜெகோப்ஸியோன் அம்மையார் பேசியதின் சுருக்கம்:—

தலைவர் அவர்களே! தோழர்களே!!

இக்கூட்டம் பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் காரியதரிசி தோழர் அ. இராகவன் அவர்களுக்கென நடத்தப்பட்டதாகையால் யான் இங்கு வந்து அவரின் அரிய சொற்பொழிவைக் கேட்டு இன்புற வந்தேனேயொழிய வேறில்லை என்றாலும் தலைவர் அவர்கள் எம்மை சீர்திருத்தமெனும் தலைப்பின் கீழ் பேசக் கட்டளை இட்டுள்ளார். அதை மறுப்பதற்கும் எம்மால் முடியாது. இன்றைய உலகம் இவ்விருபதாம் நூற்றாண்டில் சீர்திருத்திக் கொண்டு மிகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. பாஷை, அரசியல், பொருளாதாரம், சங்கீதம், நாடகம், சமூகம் இன்னும் அநேக வழிகளில் பண்டைய காட்டுமிராண்டித் தன்மையை அழிக்க முற்படுகின்றனர். ஏன்! நேற்று காட்டுமிராண்டித் தன்மையிலிருந்த வெள்ளையர் இன்று பல தேசங்களை ஆள்வதுடன் நம்மையும் ஆண்டு வருவதைக் காணலாம்.

அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான், ருஷியா போன்ற நாடுகள் எவ்வளவோ முன்னேற்றத்திற்குத் திரும்பி விட்டனர். அதைப் போல் நாமும் நடைமுறையில் இனி காண்பிக்கா விட்டால் அவமரியாதையடைந்து பின்னுக்குச் செல்வது நிச்சயம். படித்த பட்டதாரிகள் சோம்பேறித்தனமாக வாளாவிருக்கின்றனரேயொழிய தம் சமூகமாகிய தமிழர்களை முன்னேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதைக் காணவே காணோமென்றாலும் கேவலம் செய்யவும், தொழில் வித்தியாசம் கூறவும், ஜாதிப் பாகுபாடுகளை வளர்க்கவும் சிறிதும் பின் வாங்கினவர்களில்லை என்றுதான் சொல்லவேண்டும். கஞ்சிக்கு வழியற்று, வாடி வதங்கும் சகோதரனுக்கு ஒரு தம்பிடி கூட உபகாரம் செய்யார்களென்றாலும் கடவுளுக்கென்று, தேங்காய், வாழைப்பழம், குடம், சாம்பிராணிக்கென்றும் வீண் விரையமாக்குவதிற் கிஞ்சிற்றும் பின் வாங்கார்களென்பது நிச்சயம். கடவுள் உங்களைச் சிருட்சித்தது உண்மையாக இருந்தால் மயிரையும், மண்ணையுமா கேட்பார்? மனிதரின் பகுத்தறிவைப் பாழ்படுத்தும் இக்கடவுளும், அதற்காதாரமான மதமும், நூல்களும் பொய் என்று கூறும் சுயமரியாதைக்காரர்கள் கயவர்களா? அல்லது பகுத்தறிவில்லாது என்மதம் பெரிது? உன் மதம் பெரிது என்று பாகுபாடுகள் செய்து, பிரிவு உண்டு பண்ணி எழுதிய வைதீகர்கள் கயவர்களா என்றுதான் கேட்கிறேன். மனிதரை மாக்களாக்கும் மதங்கள் வேண்டாமென்றுதான் சுயமரியாதைக் கொள்கைசொல்கின்றது.

அடுத்த படியாகப் பெண்களின் சீர்திருத்தமென்பதைச் சிறிது கூறி முடித்து விடுகிறேன். பெண்களுக்குச் சீர்திருத்தம் வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால் ஒவ்வொருவரும் வேண்டுமென்றுதான் சொல்வார்களென்றாலும் இதே மாதிரிக் கூட்டங்களுக்கு மாத்திரம் அழைத்து வரமாட்டார்கள். பெண்களை அடுப்பூதும் கருவியாக ஆண்கள் நினைக்கிறார்கள்—பெண்களும் ஆண்களின் இயற்கையுணர்ச்சியைத் தணிக்கும் கருவி என்று தான் எண்ணுகிறார்கள். ஒரு பெண் ஆடுகிறாள், பாடுகிறாளென்று ஓர் விளம்பரம் கிடைத்தால் போதும் உடனே ரிசர்வெட் சீட்டுக்கு வந்து விடுவார்கள். பெண்களை அவமதிக்காதீர்கள், கேவலம் செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களை ஈன்ற தாய்மார்களுக்குச் சுதந்திரமில்லை என்று நீங்கள் தடுத்தால் நீங்களும் பிறருக்கு அடிமையாவது நிச்சயம் என்று கூறி முடிப்பதுடன் இனி நடைபெறும் கூட்டங்களுக்குச் சகோதரிகள் சமூகமளிப்பார்களென்று நம்புகிறேன்.

பிறகு, தலைவர், தோழர் அ. இராகவன் அவர்களை அறிமுகப்படுத்தி பேசியதின் சுருக்கம்:-தோழர் இராகவன் அவர்கள் திருநெல்வேலியில் பிறந்தவர் சைவசமயத்தவரென்றாலும் அதன் கோட்பாடுகளை நன்கறிந்து அதன் ஊழல்களை வெளிப்படுத்தியதுடன் கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?என்னும் நூலையும் இயற்றினார். அத்துடன் பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தை உண்டு பண்ணி அரிய கருத்துக்கள் அடங்கிய மேல்நாட்டுப்புத்தகங்களை தமிழருக்கென தமிழில் மொழிப்பெயர்த்துத் தாயகத்தில் விற்பனை செய்ததுடன், இம்மலாயாவிற்கும் வந்து அவற்றைப் பரப்பும் நோக்குடன் வந்துள்ளார். தனக்கு எது உண்மை எனத் தோன்றிற்றோ அதைச்சொல்லுவதில் சிறிதும் பின் வாங்கமாட்டார். அவர் செய்த தொண்டினை நாம் அறிந்திருக்கிறோமாகையால் அவரைப் பற்றி அதிகம் கூறாது விட்டு விடுவதுடன் அவரைப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேனென்று கூறி முடித்தார்.

தோழர் அ. இராகவன் அவர்கள்பேசியதின் சுருக்கம்.

பின் வருமாறு:—

தலைவர்அவர்களே!தோழர்களே!!

இன்று எமக்கு இடமளித்த சுயமரியாதை சங்கத்தார்களுக்கும், சமூகக் கட்டுப்பாட்டையும், ஜாதிக்கட்டுப்பாட்டையும் உடைத்தெறிந்ததுடன் எமக்கும் தடைகூறாது எதையும் பேசலாமென்று கூறியஓர் தலைவரின தலைமையின் கீழ்ப் பேச எனக்கு இடம் கிடைத்தமைக்கு வந்தனம் செலுத்துகிறேன். தோழர் ஜெகோப்ஸியோன் அம்மையார் ஏதோ நான் பேசுவதைக்கேட்க வந்ததாகவும், பல நூல்கள் படித்தவனென்று கூறிவிட்டார்கள். ஒருவன் பல நூல் படித்திருக்கலாமென்றாலும்அவனை அறிவாளி எனச்சொல்ல முடியாது. பல நூல்களைத் தாங்கியுள்ள ஓர் அலமாரியை அறிவுள்ளதென்று கூறிவிட முடியாது அதைப்போல் ஓர் இராகவன், அல்லது இராமசாமி தான் அறிவுள்ளவரென்று கூறிவிட முடியாது.

நான் இந்தியாவிலிருந்து மலாயாவிற்கு வரும் சமயம் பல தோழர்கள் எம்மிடம் கூறினார்கள் மேடை மேல் ஏறிப் பிரசாரம் செய்து விட்டுத் தப்பித்து வரமுடியாதென்றும், அரசாங்க எதிர்ப்புகளும், சமய எதிர்ப்புகளும் அதிகமுண்டென்றும் பயமுறுத்தினார்கள். பொதுவுடமை, சமதர்மம் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும் மேலும்பொதுவுடமை சமதர்மம் போன்ற பிரச்சாரங்களை மறுக்கும் அரசாங்கமாக இருந்தால் லோக்கல் பத்திரிகைகளில் ஏராளமாகப் பிரச்சாரம் செய்ய, பிரசுரமாக இடங்கொடுத்திருக்குமா? அத்துடன் அரசாங்க விஷயமும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு மதத்தைப் பிரசாரம் செய்ய எவ்வரசாங்கம் அனுமதிக்கிறதோ, அதைப் போல் அதன் ஊழல்களையும் தெளிவுப்படுத்த அனுமதிக்கத்தான்வேண்டும். நான் உண்மையைச் சொல்ல எந்த, எவ்வித இடஞ்சல்கள்நேரிட்டாலும் அஞ்சேன். கிறிஸ்தவர்கள் இந்து மதத்தைப் பழித்துக்கூறி இந்தியர்களை அவர்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டனர், மகமதியர்களும் அப்படியே செய்தனராகையால் நாங்கள் சுயமரியாதைக்காரர்கள் மனிதனுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும், ஒன்றிரண்டு மனிதனுக்காகப் பலபேர் கஷ்டப்படமுடியாதென்றும் சொல்லுகிறோம்.

நமது நாடு புண்ணிய நாடென்றும், கம்பன் காளிதாஸன் பிறந்த நாடென்றும் இந்துக்கள் பெருமையாகக் கூறுகின்றார்கள் பிறகு, ஏன்? மலாயா, செய்கோன், ஆப்பிரிக்கா, பீஜி போன்ற நாடுகளுக்குச் சென்று மானத்தை இழக்கின்றனர். ஒரு தொழிலாளியின் சம்பளம்ஒருநாளைக்கு அணா நாலு-அதுவும் இரண்டு நாலு நாள் வேலைதான். கஷ்டப்பட்டு வேலை பார்த்தாலும் சம்பளம் கிடைப்பது கஷ்டம். குளிர், அட்டை, பனி, வெய்யலுக்குள் ஆறுமணியிலிருந்து மாலை ஆறுமணி வரை, உழைக்க வேண்டும். இக்கொடுமையை யார் தான் சகிப்பது வட நாட்டிலோ சில முஸ்லீம்கள் சில இந்துப்பெண்களை பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்கலியாணம் செய்துகொண்டார்கள் பிறகு, இந்துக்களும் பதிலுக்குப் பதில் செய்யவே அவர்களின் அட்டகாசம் அடங்கிவிட்டது என்று சொல்லப்படுகிறது. நமக்குள் ஒற்றுமை

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

விசாரித்தறிவது புத்தி. புத்திமான் பலவான்.

[கைவல்யம்]

கொடுங்கோல் அரக்கனை இமயமலைபோல் வீழ்த்தினோம். கொடிய ராட்சதனை ஒழித்தோம். அ மைக்குலாம் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப்புதைத்தாய் விட்டது என்று காங்கிரஸ் பார்ப்பனர்கள் சொல்லுகின்றார்கள். அவர்கள் பத்திரிகைகள் எழுதுகின்றன. இதில் அதிசயமொன்றுமில்லை. அரக்கன், ராட்சதன் என்கிற பெயர்கள் தென்தேசத்து ஜனங்களுக்குப் பார்ப்பனரால் முன்னமேயே கொடுக்கப் பட்டிருக்கிறது. வித்தையிலோ, செல்வத்திலோ புகழோடு வாழும் தமிழன் பார்ப்பனருடைய இஷ்டத்திற்கு ஒத்திருக்காவிட்டால் அரக்கன், ராட்சதன் யென்கின்ற பெயர்போட்டு அவர்களைக் கெடுப்பதே பண்டுகால முதற்கொண்டு வழக்கம். இந்து ராஜாங்கமாயிருந்தால் எந்த விதத்திலாவது ஜஸ்டிஸ் கட்சியிலுள்ளவர்களை யெல்லாம் கொன்றிருப்பார்கள். ஆங்கிலேய ராஜியமானதால் அது சாத்தியப்படவில்லை.

மதமென்கிற ஏற்பாட்டின் பொய்பிரசாரத்தால் அறிவற்றஇந்து ராஜாக்களை மயக்கி, தங்கள் காரியங்களை சாதித்துக்கொண்டார்கள். இப்பொழுது ஜனங்கள் ஆட்சியில் கலக்கவேண்டுமென்கிற பிரிட்டிஷ் ராஜியத்தின் வோர்க்கொள்கையாகிய சட்டத்தையும், ஆங்கிலேய அதிகாரிகளின் வாய்மொழிகளையும் ஆதாரமாகக்கொண்டு தேசியம் என்ற பிரசாரத்தால் அவர்களை பயமுறுத்தி இருவரும் சமிக்ஞையால் ஒத்துப்போய் தங்கள் காரியத்தைச் சாதித்து மற்ற சமூகங்களை என்றைக்கும் கீழாகவைத்திருக்க எற்பாடு செய்து கொண்டேவருகிறார்கள். முன் பின் ஆலோசித்துப்பார்ப்பவர்களுக்கல்லவோ இதனுண்மை விளங்கும்.

ஒரு பெருஞ்சமூகத்தை சூத்திர ஜாதி யென்றும் அது யார் என்றால் பிராமண தாசிமகன், அடிமை, ஒழுக்கம் கெட்டவன், ஆச்சாரமில்லாதவன் சூத்திரன். இது நாங்கள் சொல்லுவதல்ல. வேதமென்று சொல்லபபட்ட ஸ்மிருதிகளிலும் வேதத்தின் உண்மைகளை கதாரூபமாய் விளக்கவந்த இதிகாசங்களிலுமிருக்கப்பட்டதாகுமென்றும் அந்த சூத்திர ஜாதியாரென்று கேட்டால் முதலியார், பிள்ளை, நாயடு, நாடார், கவுண்டர், செட்டியார் முதற்கொண்டு தமிழ் நாட்டார்கள் எல்லோருமாவார்கள் இதில் சில பண்டிதர்கள், சில சைவர்கள், சில பணக்காரர்கள் சற்சூத்திரர்களாவார்கள் சற்சூத்திரனென்றால் நல்ல பிராமண தாசிமகன், நல்ல அடிமை, நல்லஒழுக்கம்கெட்டவன், நல்ல ஆச்சாரமில்லாதவன் என்பதே அர்த்தமாகும். இப்படியுமிருக்குமா என்றால், வேத சாஸ்திரங்களிருக்கின்றன. வேத சாஸ்திரங்கள் கடவுளால் சொல்லப்பட்டது என்று சொல்லுவதைக் கேட்டு கல்யாணம்முதற்கொண்டு கர்மாந்திரம் வரையிலுமுள்ள எல்லா கிரிகை சடங்குகளுக்கும் தன்னைபாப்பனத்தேவடியாள் மகனென்கின்ற சூத்திரனென்று நினைத்து பாப்பார அடிமைகளென்று சொல்லக்கூடிய சூத்திரர்களுக்கு ஏற்படுத்திவைத்திருப்பதாகச் சொல்லப்படும் மந்திரத்தைப்பார்ப்பர்ன் சொல்லுவதைப் பின் தானும் சொல்லி வேண்டியதெல்லாம் கொடுத்துவரும் ஒரு பெரிய சமூகத்தின் கட்சி ஒரு எலக்ஷனில் தோற்று விட்டதென்றால் இதில் ஆச்சரியமென்ன? இதற்குஎன்ன காரணம் வேண்டும் இத்தனை காலமும் வாழ்ந்து வந்த அடிமைத்தனமும், ஆலோசித்துப்பார்க்காத அறிவற்ற செய்கையல்லவா?

பிராமண தாசிமகன் அடிமை என்று வேதசாஸ்திரத்தில் எழுதி வைத்திருப்பதாக பார்ப்பனர்கள் சொல்லுவதை நம்பி அது கடவுளால் சொல்லப்பட்டதென்பதை ஒப்புக்கொண்டு அடிமை என்பதை அங்கீகரித்து அனுபோகத்தில் காட்டிக்கொண்டு அதனாலேயே தன் சுக துக்கங்களைக்கடவுள் காப்பாற்றுகிறார் அதுமோட்சத்திற்கு வழியென்று நம்பி, பயந்து நடந்துவரும் சமூகம்ஒருசிறு எலக்ஷனில் தோற்றுப்போய் விட்டதென்பது என்ன ஆச்சரியம்.

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

மதப்படிப்பு எதற்கு?

மதப்படிப்பு கற்றுக்கொடுக்க ராணுவம் தான் ஆக்ஷி செலுத்தவேண்டும்.

———)o(———

(கைவல்யம்)

கலாசாலே மாணவர்களுக்கு மதக் கல்விப் படிப்பில்லாமையால் சன்மார்க்கம் சீர்படவில்லையென்றும், கலாசாலே விளையாட்டுகள் நற்குணங்களைப்போதிக்கின்றனவென்றாலும், அவைகளுக்கு மத சம்பந்தமான அஸ்திவாரமில்லையென்றும், விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவியைக்கொண்டு தவறான வழியில் மத சம்பந்தமான கொள்கைகளெல்லாம் தகர்த்தெறியப்படுகின்றனவென்றும், அதனால் நன்னடக்கையின் அஸ்திவாரமேஆடிப்போய் விடுகின்றனவென்றும், இந்து, இஸ்லாம், கிறிஸ்து மதப் படிப்புகளைக் கற்றுக்கொடுக்க கலாசாலையில் ஒரு விதி இருக்க வேண்டுமென்றும், சர்வகலாசாலே அதிகாரிகள்மதப் படிப்பை கல்வித் திட்டத்தில் புகுத்த வேண்டுமென்றும் சர். கே வி. ரெட்டி நாயுடு சொல்லுகிறார். அவர் பிரபலஸ்தரானதினால் அவர் பிரசங்கம் பல சந்தர்ப்பங்களில் மேற்கோளாக வரலாம்

மதம் என்றால் என்ன.

மதமென்பது பேச்சல்ல; கொள்கைகளும் அல்ல; நம்புவதற்காகமாத்திரம் பிரயத்தினம் செய்வது மல்ல; முன்னோர் வார்த்தைகளை கிளிப்பிள்ளைகள் போலமனனம் செய்து கொண்டிருப்பது மல்ல: மத மென்னும் பெயரால் ராஜீய விஷயங்களை முடித்துக்கொள்ளுவதுமல்ல; வியாபாரத் தோரணையுமல்ல; ஆசார அபிநயநடிப்பல்ல; மத மென்பது ஜாதிகளைப்பற்றிக் கொண்டும், சமூகங்களைப்பற்றிக் கொண்டும், கலாசாலைகளின் உள்ளிருந்தும் வசிக்காது. "ஆத்மாவிற்கும், கடவுளுக்குமுள்ள சம்பந்தமே" மதமாகும். "உன்னிடமுள்ள சகலவற்றையும் விற்று ஏழைகளுக்கு உதவிவிட்டு என்னைப் பின்பற்று" என்று ஏசு கிறிஸ்து சொன்னதும், அதோடு "தேகப்பற்றையும் விட்டுவிடு" என்று இந்து மதம் சொன்னதும் தான் மதமாகும். பற்றின்மை ஒன்றினால் தான் இந்த மதத்தை யடையலாம். மதத்தினிடத்தில் சென்று மேலான லட்சியத்தையடைய விரும்புகிறவன் உலக போகங்களில் மூழ்கி யிருக்க முடியாது. இதுவே எல்லா மதங்களின் நிச்சயமாகும்.

இன்றுள்ள நிலை.

இப்பொழுது நடை முறையிலிருக்கும் மதமானது மதத்தின் பெயரால் மனிதனை மனிதன் அடிமை கொள்ளவும், ஒரு ஜாதிக்கு இன்னொரு ஜாதி தாசிமக்களென்பதும், இன்னொரு ஜாதிக்கு இன்னொரு ஜாதி சண்டாளனென்பதும், தம்தம் மதமே பெரியதென்கிற தர்க்கமும், பகையும் இவைகளை யெல்லாம்மேற்கொண்டு நடப்பதே மத ஒழுக்கத்தில் ஏறுவதற்கு மார்க்கமென்று பெரியவர்களும், கடவுளும்சொன்னதாகச்சொல்லப்படுகிறது. ஆச்சாரி, குருக்கள், புரோகிதன் முதலியவர்களுடைய சுகத்திற்கும், பணத்திற்கும்' விசாரணை நடக்கும் இந்த மதத்தையும் கற்றுக்கொடுக்கும் இடமும் கலாசாலையல்ல. மடமும் கோவிலுமேயாகும். இந்த இடமுமல்லாதகலாசாலேகளில்கற்றுக் கொடுப்பதால் மாணாக்கர்கள் என்ன நன்னடக்கையைக் கற்றுக் கொள்ளுவார்.

புட்பால், கிரிகட், ஹாக்கிமுதலிய ஆட்டங்கள் ஒழுங்காக ஆடி வருவதற்குப் பஞ்சாயத்தாரும், முறையாய் ஆட்டிவைக்கத் தலைவரும், ஜெயித்தவர்கட்குப்பரிசளிக்க ஏற்பாடுகளும் இருந்து நடந்துவருகையில், இதற்கு மத சம்பந்தமான அஸ்திவாரமெதற்கு?

"தற்காலத்து விஞ்ஞான சாஸ்திரத்தின் பிரகாசத்தால் மத சம்பந்த உண்மைகளெல்லாம் தகர்த்தெறியப்பட்டு, இதனால் நம் நன்னடக்கையின் அஸ்திவாரமே ஆடிப்போய் விடுகின்றன" வென்பது சரியல்ல. விஞ்ஞானமானது தம் மத கொள்கைகளே உண்மை யெனச் சொல்லி வந்த சமயவாதிகளின்கக்ஷிவாதங்களையும், மூடப் பிடிவாதங்களையும், அறிவற்ற நம்பிக்கைகளையும் தான் தகர்த்தெறிந்து மனிதனின் புத்தியை விசாரணையில் செலுத்துகிற தென்பதே சரியாகும்.

ஒழுக்கத்திற்கு உதவியா?

மதத்திற்காகவே பிறந்து, மதத்திலே வளர்ந்து, மதமே படித்து, மதத்தொழிலே புரிந்து, மதத்திலே உயிர்வாழ்ந்து வரும் ஆச்சாரி: குருக்கள், புரோகிதர்கள், மடாதிபதிகள்முதலியவர்களின் நன்னடக்கையான ஒழுக்கத்திற்கு மதம் ஏதாவது உதவி யிருக்கிறதா? மதத்தின் நன்னடக்கை இவர்களில் எத்தனை பேர்களிடம் விளங்குகிறது? மதத்தினால் நன்னடக்கை அடைய வேண்டியவர்கட்கே மதக் கல்வி உபயோகப்படாமலிருக்கையில்கலாசாலை மாணவர்கட்குஎப்படி உபயோகப்படும்? ராஜாங்க சட்ட

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

பெண்களுக்கு சமத்துவம் வேண்டும்.

[பஞ்சாப் மாகாணத்தில் முதல் ஸ்திரீ வக்கீலான தோழர் எஸ். ஜயலால் எழுதியதின் சாராம்சம்பின் வருமாறு.]

பழைய சட்டங்களைச் செய்தவர்களெல்லாம் ஆடவர்கள அவர்களெல்லா உரிமைகளையும்தங்களுடையஏகபோகமாக்கிக்கொண்டார்கள். பெண்கள் இந்தக் கடமைகளுக்குப் பொறுப்பாளிகள் என்று மட்டும் குறிப்பிட்டார்கள். சொத்துரிமை, சம அந்தஸ்து இவைகளைப் பழைய சட்டங்களெல்லாம் பெண்களுக்கு மறுத்திருக்கின்றன.

இத்தகைய நிர்ப்பந்தங்கள் பெண்களின் முன்னேற்றத்துக்கு இடையூறாக இருக்கின்றன. உலகமெங்கும் ஆண்களைப்போலவே பெண்களும் சரிசமானமாக வாழவேண்டும் என்ற ஒரு கிளர்ச்சி நடந்துவருகிறது. மேனாடுகள் பலவற்றில் அத்தகைய சமத்துவ மேற்பட்டுவிட்டது. இந்தியாவைப்போன்ற சில தேசங்களில்தான் வித்தியாசங்கள் இன்னும் நீடித்து வருகின்றன.

ஹிந்துலாவின் கீழ் பெண்களுக்குள்ள சில கஷ்டங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். ஒரு புருடன் தன் மனைவியைப் புரக்கணித்துவிட்டு வேறொரு பெண்ணை மணந்தால், முதல் மனைவிக்குப்பரிகாரமேகிடையாது. விவாகத்திற்குப் பிறகு ஒரு பெண்ணின் மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் அவளுடைய கணவனும், அவளுடைய உறவினருமே நியாயமான ஒரு சட்டம் அவளுக்கு "சம அந்தஸ்து" அளிக்க வேண்டும். விவாகத்திற்குப் பிறகு ஒரு பெண்ணுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒரே உரிமைதான் இருக்கிறது. கணவன் உயிருடனிருந்தால், அவளுக்கு ஜிவனாம்சம் கிடைக்கும். மைனர் விதவையாயிருந்தால் கணவனுடைய உறவினரின் சம்ரக்ஷணையின் கீழிருக்க வேண்டும். அவளைக் காப்பாற்ற வேண்டுமென்ற சட்ட பூர்வமான நிபந்தனை அவர்களுக்கு இல்லை. ஆகையால் இச்சட்டப்படி ஒருவன் விதவையான தன் மருமகளையோ, அல்லது பேத்திகளையோ காப்பாற்ற வேண்டுமென்று கட்டாயமில்லை.

இப்படியும் ஒரு சட்டம்! இதைவிட அநியாயம் வேறு ஏதேனும் உண்டா? இஸ்லாமியச் சட்டத்தின்படி பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு. ஆனால் ஆணுக்குக் கிடைப்பதில் அரைப்பாகம் தான் பெண்ணுக்கு நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. சட்டங்கள் ஒரு பக்கமிருந்தாலும் பொதுவாக இந்தியப்பெண்கள் நடத்தப்படும் முறை முற்றிலும் வெறுக்கத்தக்கதாகும். நாளுக்குநாள் இந்தியப்பெண்கள் அபிவிருத்திமடைந்து வருகிறார்களென்பதை மறுப்பதற்கில்லை. பொதுவாகப் பெண்களின் உரிமையைப் பெறவேண்டுமானால் நாம் (பெண்கள்) ஒற்றுமையாகக்கிளர்ச்சி செய்யவேண்டும். நாம் கேட்பது சலுகையல்ல. உரிமைகள்தான். சட்டங்களைத் திருத்தியமைக்கப் பெண்களடங்கிய ஒரு கமிஷனை சர்க்கார் நியமிக்க வேண்டும்.தெ: நெ

திருவனந்தபுரத்தில் சுயமரியாதை நாடகம்.

திருவனந்தபுரம் சித்திர கலா சாலை நாடக சங்கத்தார் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு விக்டோரியா ஜுப்ளிடவுன் ஹாலில் திராவிட பாஷை புரபசர் தோழர் வி. கிருஷ்ணன் தம்பி எம். ஏ அவர்களால் இயற்றப்பட்ட "துரெளபதை விஜயா" என்னும் நாடகத்தை நடத்திக் காட்டினார்கள். இதற்கு பெரியதொரு கூட்டமக்கள் விஜயம் செய்ததுடன், பிரபல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

நாடகம் நடத்தப்பட்ட முறையும் நடிகர்கள், நடித்த மாதிரியும் மிகவும் மேன்மையாயும், பாராட்டத்தக்கதாயும் இருந்தது.

அவற்றுள் டாக்டர்-கே.கோதவர்மாதோழர்கள்சேபால்பிள்ளை, பி. அனந்தபத்மநாபன் ஆகியவர்களது நடிகை குறிப்பிட்டு கூறத்தகுந்தது என்றே சொல்ல வேண்டும்.

நாடகக் கதையானது சாதாரணமானதாய் இருந்தாலும் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. ஆனால் ஒரு விஷயம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதாவது எவ்வளவு புத்திசாலித்தனத்தையும், சிரமத்தையும் காட்டியும் செலவழித்தும் நடத்தும் கதையானது இம்மாதிரி பழங் காலப் புராணக் கதைகளாய் இல்லாமல் மக்கள் அறிவுக்கும், நடப்பின் நன்மைக்கும பயன்படக் கூடியதாய் இருந்தால் நாடகம் மக்களுக்குப் பயன்படக்கூடியதாய் இருக்கும் ஆனாலும் ஆசிரியர் தம்பி மிகவும் பாராட்டுதலுக்குடையவர் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஏனெனில் தோழர் ஆர். பத்மன் அவர்களால் இயற்றப்பட்ட மனிதனின் கற்பனை எண்ணங்கள் (Men of ideas) என்கின்ற ஒரு சிறு விஷயத்தை பார்சு மாதிரி நடிக்கப்பட்டது. தோழர் பத்மன் அவர்கள் ஒரு முக்கியமான சுயமரியாதைத்தொண்டராவார்.

ஒத்துழையாமைகாலத்தில் ஜெயிலுக்குப் போனவர். அன்றியும் நல்ல பழுத்த சமதர்மவாதி. தோழர் காந்தியார் கன்னியாகுமரி வந்திருந்த போது சுயமரியாதை தோழர்களின் தூதை நடத்திச் சென்றவர். "Satans sameluary" என்ற நாடகமும் (Breaking The Fetters என்கின்ற நாடகமும் எழுதினவர். முதல் நாடகத்தை சென்ற வருஷம் கூட நடத்திக் காட்டப்பட்டது.

(Men of Ideas) என்கின்ற நாடகம் ஒரு சில வேலையற்ற வாலிபர்கள் முயற்சியில் நடத்திக் காண்பிக்கப்பட்டது. அந்த நாடகத்தில் தேசத்தில் உள்ள வேலை இல்லாத திண்டாட்டத்தைப்பற்றியும் சில விஷயங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இதன் பெருமைகள் தோழர் பிரின்சிப்பால் சி. வி. சந்திர சேகரய்யருக்கு உரியதாகும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாகபட்டினம் சுயமரியாதைச் சங்கம்

மெம்பர்கள் கூட்டம்

31-12-34 ந்தேதி மாலை 6½ மணிக்கு சங்க மெம்பர்கள் கூட்டம் தோழர் எஸ். நாராயணசாமி அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது சங்க சம்பந்தமாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு தலைவரால் பிரரேபிக்கப்பட்டு மெம்பர்களால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

தீர்மானங்கள்:—

1. தற்போது இருக்கும் நிர்வாக சபையைக் கலைப்பதுடன் 1935ம் வருடத்திற்கு சங்ககாரியங்களை கவனிப்பதற்காக தோழர் என். சிவஞானம் அவர்களை சர்வாதிகாரியாக இக்கூட்டம் நியமிக்கிறது.

2. a தஞ்சை ஜில்லா போர்டை இரண்டாகப்பிரித்து அதில் கிழக்குத்தஞ்சை ஜில்லா போர்டை நாகபட்டணததிலேயே நிறுவியகனம் ஸ்தலஸ்தாபன மந்திரியை இக்கூட்டம் பாராட்டுகிறது.

b கிழக்குத்தஞ்சை போர்டின் செல்வ நிலைமையின் மேம்பாட்டிற்காகவும், உயர்விற்காகவும் இந்த கிழக்குத்தஞ்சை ஜில்லா போர்டோடு மன்னார்குடி தாலூகாவையும் சேர்க்கவேண்டுமென இக்கூட்டம் கனம் ஸ்தலஸ்தாபன மந்திரியைக்கேட்டுக் கொள்கிறது.

3. நமது சுயமரியாதை இயக்கத்தை தற்காலிகமாக—காங்கிரஸ், ஜஸ்டிஸ் இயக்கங்களின் தொடர்பின்றி தனித்தே நடத்திவரவேண்டுமென இக்கூட்டம் இயக்கத்தலைவர்களை கேட்டுக்கொள்கிறது.

4. ஜோலார் பேட்டையினின்று வெளிவரும் சமதர்மப்பத்திரிகைக்கு சென்னை சர்க்கார் ரூ 3000 கேட்டிருப்பதை, ஆட்சேபித்து எதிர்வழக்காட வேண்டுமென்று சமதர்ம ஆசிரியர்களான தோழர்கள் வி. பார்த்தசாரதி,பி. ஜீவானந்தம்ஆகியவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

5. தஞ்சையில் ஜனவரி மாதம் கூடப்போகும் நான்காவது ஜில்லா மகாநாட்டிலேயே நமது மாகாண மகாநாடு கூட்டுவது சம்தமான முடிவான தீர்மானத்தை தலைவர்கள் செய்யவேண்டுமென்று இக்கூட்டம் இயக்கத்தலைவர்களை கேட்டுக் கொள்கிறது.

நன்கொடை.

நமது பத்திரிகைக்குக் கீழ்க்கண்ட தோழர்கள் ஒவ்வொரு ரூபாய் வீதம் . நான்கு ரூபாய் வீதம் நன்கொடையளித்துள்ளார்கள். அவர்களுக்கு நமது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அவர்கள் பெயர்கள் வருமாறு. தோழர்கள் சதாசிவம் அவர்கள் ரூ 1. எஸ். கந்தப்புகாட்டிரூ 1, எம்,கந்தவனம் (ஐயர்) ரூ. 1, எஸ். எல். சோணையப்பன் ரூ. 1.

பொன்மலை சுயமரியாதைச் சங்கம் நிர்வாகக் கூட்டம்.

30-12-34ந் தேதி மாலை 5-30 மணிக்கு பொன்மலை சுயமரியாதைச் சங்கக் காரியாயத்தில் ஓர் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றன. அதுசமயம் தோழர் கே. எஸ். முத்து அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது சங்க முன்னேற்றமான விஷயங்களைப்பற்றி சிலதோழர்கள் பேசினார்கள். கடைசியாகக்கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறப்பட்டு இரவு 7-30மணிக்கு இனிது முடிந்தது.

தோழர் கே. எம் பாலசுப்பிரமணியம் பி. எ. பி. எல். அவர்களை சென்னை மகாணத்தின் சார்பாக இந்தியா சட்டசபைக்கு நியனம் செய்யும்படி வைசிராய் அவர்களையும், சென்னை கவர்னர் அவர்களையும் இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

ஜோலார்ப்பேட்டையிலிருந்து வெளிவரும் "சமதர்மம்" என்ற பத்திரிகைக்கு கவர்ன்மென்டார்ரூ 3000 ஜாமீன் கேட்டதற்கு இக் கூட்டம் வருந்துகிறது.

—0—

பாதிரியின் யோக்கியதை

பாவ மன்னிப்பின் பேரால் செய்த அயோக்கியத்தனம் உயிருக்கு உலையாய் வந்தது.

அமெரிக்கா நியூயார்க் பட்டணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் ஒரு பாதிரியின் படுக்கை அறையில் ஒரு பெண்ணும் ஒரு பாதிரியாரும் கொலை செய்யப்பட்டிறந்து கிடந்ததை அறிந்து போலீசார் சென்று விசாரித்ததில் அடியில் கண்ட உண்மைகள் வெளிப்பட்டன.

இறந்து கிடந்த பாதிரியின் பெயர் நியூ ஜொசியைச் சேர்ந்த லாரன்ஸ் வில்லி என்னும் ஊரில் இருக்கும் கத்தோலிக்க மத குருவான ரெவரெண்ட் ஜோன், ஜே, லியோனார்ட் என்பவராகும்.

இறந்து கிடந்த பெண் ரூத் ஆர்ம்ஸ்ட்ராங் என்னும் பதினேழு வயதுடைய ஒரு நாடகப் பெண் ஆகும்.

இருவரும் நியூயார்க் பட்டணத்தில் உள்ள "நைட்ஸ் of கொலம்பஸ்" என்னும் ஹோட்டலில் பாதிரியார் அறையில் கொலை செய்யப்பட்டு செத்துக் கிடந்தார்கள்.

இந்தக் கொலையானது அந்த பெண்ணின் புருஷரானவரும், லாஸ் ஏஞ்சல் என்னும் ஊரில் பாதிரித் தொழிலுக்குப் படித்துக்கொண்டிருந்து புதிதாய் கல்யாணம் செய்துகொண்ட வரும நியூயார்க் பட்டணத்துக்கு வந்தவருமான ஜோசப் ஸ்டீடன் மெட்ஸ் என்பவரால் செய்யப்பட்ட கொலையாகும்.

பாதிரியார் இறந்து கிடந்த அறைக்குள் போலீசார் பிரவேசித்த பொழுது அங்கு உயிருடன் இருந்த ஜோசப் ஸ்டின் மிட்ஸ் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்.

அதாவது நான் மெக்ஸிகோவில் சென்ற நவம்பர் மாதம் 10 தேதி ரோதாவை கல்யாணம் செய்துகொண்டு ஹனிமோன் (வெள்ளைக்காரர்களுக்குள் கல்யாணமானவுடன் புணமக்கள் உணர்ச்சிகளை சுதந்தரத்துடன் அனுபவிக்க ஒரு ஊருக்குப் புறப்பட்டு அங்கு இருவரும் தனியே வசித்து கோலாகலமாய் இருந்து காதல் திருநாள் கொண்டாடுவதற்கு ஹனிமோன் என்று சொல்லுவது) காதலுக்காக இருவரும்யார்க்குக்குநியூ வந்தோம். நாங்கள் பயணம் புறப்படுகையில் ஒரு கைத்துப்பாக்கி வாங்கிக் கொண்டு வந்தேன்.

இந்த ஹோட்டலில் இறங்கி காலைச்சிற்றுண்டி அருந்தும் போது பாதிரியார் பாதர்லியோனார்ட் அவர்களை சந்தித்துப் பேசினேன்.

ராத்திரி அவர் எங்கள் அறைக்கு வந்து பேசிக்கொண்டு இருந்தார். இன்று காலை அவரை முன் மண்டபத்தில் சந்தித்த பொழுது எனது ஜோப்பில் இருந்த பிஸ்தோலை (கைத்துப்பாக்கியை) எடுத்துக் கொண்டதோடு எங்களை பகல் சாப்பாட்டுக்கு அழைத்தார். நாங்கள் அவருடன் ஒரு உண்டி சாலைக்குச் சென்றோம்.

எனக்கு மதுவும், மாமிசமும் வாங்கிக் கொடுத்தார்- அதனால் சிறிது மயக்கமும் ஏற்பட்டது பிறகு நாங்கள் எங்கள் அறைக்கு வந்து விட்டோம். லியோனார்ட் பாதிரியார் கையில் ஒரு பாட்டல் சாராயம் வாங்கிக்கொண்டு எங்களுடன் கூடவே எங்கள் அறைக்கு வந்தார்.

அதையும் நான் குடித்ததில் அதிக போதைக்காரனாகி விட்டேன்.

இந்த சமயத்தில் பாதிரி லியோனார்ட் என்னைப் படுத்துக் கொள்ளும்படி சொன்னார். நான் படுத்துக் கொண்டேன். என் மனைவியைப் பார்த்து பாவமன்னிப்புப் பெறுவதற்காக என்னுடன் வா என்று சொல்லி அவளைக் கூப்பிட்டது என் காதில் விழுந்தது. பிறகு என் மனைவி என் அறையில் காணப்படவில்லை. சிறிது நேரம் பொறுத்து எழுந்து என் மனைவியைத் தேடிக்கொண்டு கீழே இருந்த பாதிரியின் அறைக்குப் போனேன். அந்த அறையின் கதவு உள் தாள் இட்டிருந்தது. அதைத் தட்டினேன். கதவு திறக்கப்பட்டது

உள்ளே சென்று பார்த்ததில் அந்தக் காட்சியானது பார்க்க சகிக்கக் கூடாததாய் இருந்ததுடன் அது எனக்கு மிகவும் ஆத்திரத்தை உண்டாக்கி விட்டது. கழட்டிப் போடப்பட்டிருந்த பாதிரியாரின் கோட்டின் அருகில் சென்று அதில் இருந்த பிஸ்தோலை (கைத்துப்பாக்கியை) எடுத்துக்கொண்டேன்.

அப்புறம் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. அப்போது என் மனமானது மிக்க படபடப்பில் இருந்தது என்று சொன்னார்.

2,00000 கோவா கிறிஸ்தவர்கள் களின் சுயமரியாதை

இரண்டு லக்ஷம் பேர் சுயமரியாதைக்காக இந்து மதத்தில் சேரப்போகின்றார்களாம்.

கோவாவில் உள்ள கத்தோலிக்க கிருஸ்தவக் கோவில்களில் வகுப்புவேற்றுமையும், ஜாதி வித்தியாசமும் பாராட்டப்படுவதை சகிக்கமாட்டாமல் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

சமீபத்தில் பூனாவில் கூடப் போகும் இந்திய கத்தோலிக்கக் கிறிஸ்தவர் மகாநாட்டுக்கு ஒரு தீர்மானம் அனுப்பப் போகிறார்கள்- அதாவது:—

"இப்பொழுது நட முறையில் இருந்து வரும் வகுப்பு வேற்றுமையில் இரண்டு லக்ஷம் கத்தோலிக்கக்கிறிஸ்தவர்களுக்கு மதத்தின்மீதும், மதஸ்தாபன கர்த்தாக்கள் மீதும் துவேஷம் ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்றாவிட்டால் இரண்டு லக்ஷம் பேரும் இந்து மதத்தில் சேர்ந்து விடுவோம்." என்று சொல்லப்போகின்றார்களாம். இந்து மதத்தில் பார்ப்பனர்கள் எப்படியோ, அப்படியே நமது ரோமன் கத்தோலிக்க பாதிரிமார்களும் ஆவார்கள் அவர்கள் இந்த மாதிரி பூச்சாண்டிக்கு எல்லாம் பயப்பட மாட்டார்கள். ஒரு இந்து இருந்தாலும் போதும் அவனை புழுமாதிரி அரித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம் என்று எப்படி நமது பார்ப்பனர்கள் கருதிக்கொண்டு அறிவுக்கும், மானத்துக்கும் பொருத்தமில்லாத முறைகளை வைத்துவாகழுகின்றார்களோ அதுபோலவே ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்தவன் இருந்தாலும் போதும்என்ற தைரியத்தின் பேரில்அறிவுக்கும், மானத்துக்கும் பொருத்தமில்லாத கொள்கைகளை வைத்து வாழலாம் என்கின்ற குணமுடையவர்கள். ஆதலால் அவர்களுக்கு நீதியைப்பற்றியோ, கிறிஸ்து கட்டளைகள் என்பதைப் பற்றியோ, பகுத்தறிவைப் பற்றியோ கவலை கிடையாது.

மக்களைப் பிரிவினையாகவும், வேற்றுமையாகவும் நடத்துவதற்கு அவக்கள் வெட்கப்படுவதும் கிடையாது. எல்லோரையும்நன்றாய் வைவாகள். கட்சியாய் சுயமரியாதை இயக்கத்தின் மீது பழிபோடுவார்கள்.

தஞ்சை ஜில்லா 4–வது சுயமரியாதை மகாநாடு.

வரவேற்புக்கமிட்டி அறிக்கை.

தஞ்சை ஜில்லா நான்காவது சுயமரியாதை மகாநாட்டை தஞ்சை கிருஷ்ணலீலா தியேட்டரில் நடத்துவதாகத்தீர்மாக்கப்பட்டிருக்கிறது.

ஷை மகாநாட்டை 1935 ௵ ஜனவரியில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வரவேற்புக்கமிட்டி டிக்கட் ரூ. 2-ம், டெலிக்கேட் டிக்கட்ரூ. 1-ம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிரதிநிதிகளுக்குச்சாப்பாட்டு வசதியும், இடவசதிகளும் இனாமாகச்செய்யப்படும்.

திறப்பாளர், தலைவர் முதலியவர்களுக்கு கடிதப்போக்கு வரத்துநடந்துவருகிறது. முடிவு தெரிந்தவுடன் விளம்பரப் படுத்தப்படும்.

கோ. ஆளவந்தார்,
ஜெனரல் காரியதரிசி.

புது வருஷப் பட்டங்கள்

கோயம்புத்தூர் தோழர் டி. எ. ராமலிங்கம் செட்டியார், சிதம்பரம் பிரின்ஸ்பால் தோழர் எஸ். ஈ. ரங்கநாதன் ஆகியவர்களுக்கு திவான்பகதூர் பட்டமும், ஈரோடு தோழர் எஸ். சாம்பசிவம்பிள்ளை, திருநெல்வேலி ஆவுடைப்ப பிள்ளை ஆகியவர்களுக்கு ராவ்சாஹிப்பட்டமும்கிடைத்திருக்கின்றன.

உலகத்திலுள்ள மொத்த டெலிபோன்கள்

சமீபத்தில் கிடைத்த ஒரு புள்ளி விபரத்தின் வாயிலாக உலகத்தில் மொத்தம் 33,000,000 டெலிபோன்களிருப்பதாகத் தெரியவருகிறது. அதில் ஐக்கிய அமெரிக்காவில் 17,424,406 டெலிபோன்களும், ஜெர்மனியில் 2,960,401 டெலிபோன்களும், பிரிட்டனில் 2,146,409,க்குச் சற்று அதிகமான டெலிபோன்களுமிருப்பதாகத் தெரியவருகிறது, இக்கணக்கின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்காவில் 100 பேருக்கு 14 டெலிபோன்வீதம் இருப்பதாகக் கணிக்கப்படுகிறது.

பகுத்தறிவு.

ஈரோடு, 1935-ஷு ஜனவரி-மீ 6-உ

வருஷப் பிறப்பு.

இங்கிலீஷ் புது வருஷம் பிறந்தது என்று மக்கள் அதை ஒரு பண்டிகை போல் கொண்டாடினார்கள். "புதிய வருஷம் உங்களுக்கு ஒரு சந்தோஷகரமான வருஷமாய் கழிய வேண்டும்" என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லிக்கொண்டார்கள்.

தமிழ் வருஷப் பிரப்புக்கும் கூட சில இடங்களில் இம் மாதிரி வாழ்த்துச் சொல்லிக்கொள்வதும், சன்மானம் வழங்கிக்கொள்வதும் உண்டு.

இவை ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக்கொள்ளும்போது தலைப்பில் மகா-ா-ா-ஸ்ரீ என்று போடுவதும், மேல் விலாசம் எழுதும்போதும் ஒருவருக்கொருவர் மகா-ா-ா-ஸ்ரீ என்றுபோடுவதும்எப்படி ஒரு பத்ததியாகவும், வழக்கமாகவும் இருந்து வருகின்றதோ அதுபோல் தான் புதிய வருஷப் பிறப்பு வாழ்த்தும் இருந்துவருகின்றது.

அனுபவத்தில் எவ்வித வாழ்த்தும் மக்களுக்கு யாதொரு பயனும் அளிப்பதில்லை. அவனவனுடைய நிலைமையில் இவ் வாழ்த்துக்களால் எவ்வித மாறுதலும் ஏற்படுவதுமில்லை.

ஆகவே இவ் வாழ்த்துக்களையும், புது வருடப் பிறப்புக் கொண்டாட்டங்களையும் பல வித மூடப் பழக்க வழக்கங்களில் ஒன்றாகத்தான் கருத வேண்டுமேயொழிய மற்றபடி இதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை. ஆதலால் இதை நாம் கொண்டாடவில்லை. என்பதோடு புது வருடப் பிறப்புக்காக நாம் யாரையும் வாழ்த்தவும் போவதில்லை.

ஆனால் புது வருடம் பிறக்கும் போது இந்த நாட்டில் மக்களுக்கு வேலை இல்லாக் கஷ்டம் சென்ற வருஷங்களைவிட இரட்டிப்பாய் இருக்கும் நிலையில் பிறந்திருக்கிறது.

எங்கு பார்த்தாலும் எந்தத் துறையில் ஆனாலும் "வேலையில்லை, வேலையில்லை" என்று மக்கள் அலைந்தவண்ணமாகஇருக்கிறார்கள்.

அருமையான கைத்தொழில்காரர்களும், நல்ல வேலை ஞானமுள்ளவர்களும், வியாபார குமாஸ்தாக்களும், S. S. L. C, B. A. M. A, படித்தவர்களும் மற்றும் வக்கீல், வாத்தியார், வைத்தியம், இஞ்சினீர் முதலியவற்றில் படித்து பட்டம் பெற்றவர்களும்வேலை "இல்லை, வேலை இல்லை" என்று அலைந்தவண்ணமாக இருக்கிறார்கள். S. S. L. C. படித்தவர் மீ 10ரூபாயுக்கும் B. A. படித்தவர் மீ 15, 20ரூபாய்க்கும், B. A. B. L, படித்தவர்கள் மீ 35, 40ரூபாய்க்கும் சம்பளத்துக்கு வருவதற்கு 100க்கணக்காய் காத்திருக்கிறார்கள் B. A. L. T. கள் 25 அல்லது 30ரூபாய் கொடுத்தால் போதும் என்று அலைகின்றவர்களும் இருக்கிறார்கள் B. A.யும் M. A. யும் போலீஸ் கான்ஸ்டேபிளாகச் சேருவதற்கு அலைவதாக மலையாளத்தில் இருந்து சேதிகள் வந்திருக்கின்றன. வைத்தியத்தில் அசிஸ்டெண்ட் சர்ஜன் பாஸ் செய்தவர்கள் 50ரூ சம்பளத்துக்கு பறக்கிறார்கள். இவர்கள் நிலைமை இப்படி இருக்கும்போது.

வெறும் நாலாவது பாரம் 5வது 6-வது பாரம் வரை படித்துவிட்டு மேலால் படிக்க முடியாமலும், 2தரம், 3தரம் பரிசைஷயில் பெயிலாகிவிட்டும் சரீரத்தால் வேலை செய்ய வெட்கப்பட்டுக்கொண்டு எழுத்து வேலை, எடுபிடிஆள் வேலை ஆகியவைகளுக்காக மீ 6ரூ 7ரூபாயிக்கு தொங்கிக்கொண்டிருக்கும் 100க்கணக்கான மக்களின் நிலைமையைப் பற்றி சொல்லவேண்டுமா என்று கேட்கின்றோம்.

நாள்தோறும் காலை நேரங்களில் படுக்கையை விட்டு எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு முன் வாசல் முத்தத்துக்கு வந்தால் வேலை கேட்பதற்காக வந்து வாசற்படியண்டை காத்து நிற்கும் ஆட்கள் முகத்தில் தான் விழிக்க நேருகின்றது.

அவரவர் குடும்பநிலையையும், படிப்பதற்காகப்பட்டகஷ்டங்களையும்மற்றும் பட்டினி கிடக்கும் மாதிரியையும் கேட்டால் கேட்கும் போதே உலக நிலையைப்பற்றி ஆத்திரம் சொல்லி முடியாத அளவு தோன்றுகின்றது.

பட்டணங்களில் உள்ள குடும்பங்களில் சற்றேரக்குறைய 100-க்கு முப்பது நாற்பது குடும்பங்களுக்கு மேலாகவே இந்த மாதிரி கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றதாக தெரிய வருகின்றது.

இந்த நிலை மாறுவதற்கு புது வருடப் பிறப்பும், புதுவருஷ வாழ்த்தும் என்ன செய்யப் போகின்றது என்பது தெரியவில்லை.

நாட்டின் செல்வ நிலைக்கு இந்த 10, அல்லது 15 வருஷ காலமாகவே எவ்விதக்குறைவும் சொல்ல முடியாமல். நாளுக்கு நாள் செல்வம் வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றது.

இந்தியாவின் வருமான வரிக்கணக்கைபோ, அல்லது இந்தமாகாணத்தின் வருமான வரிக்கணக்கையோ பார்த்தால் செல்வவான்களுக்குச் செல்வம் எப்படி வளர்ந்து கொண்டு வந்திருக்கின்றது என்பதும், புதிய வரும்படிக்காரர்கள் எவ்வளவு பேர்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்பதும் தெரிய வரும்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய நிலைமையும் இப்போது எவ்வளவு கொண்டாட்டமாய் இருந்து வருகின்றது என்பதை ஆகாரப்பொருள், துணி, மற்ற அனுபவப் பொருள் ஆகியவை இந்த 4, 5 வருஷங்களில் 100-க்கு 50 பங்கு வீதம் விலைகள் குறைந்து வந்திருப்பதைக்கவனித்தால் விளங்கும். ஆகவே வியாபாரிகளும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் முறையே செல்வம் பெருகிக்கொண்டு சம்பளங்களில் ஏராளமாக மிச்சம் செய்து கொண்டு போக போக்கியங்களுடன் வாழுவதும் மற்றபடி ஏராளமான பொது மக்கள் வேலையில்லாமல் கஞ்சிக்கும், துணிக்கும் திண்டாடிக்கொண்டு கிடப்பதும் என்றால் இந்த மாதிரி வாழ்க்கைமுறையை என்னவென்று சொல்வது என்பது நமக்கே விளங்கவில்லை.

புது வருஷம் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறது என்பதும் நமக்கு விளங்க வில்லை.

இந்த நிலைமையில் உள்ள நாட்டில் அர்த்தமற்ற கிளர்ச்சிக்கு மாத்திரம்ஒன்றும் குறைவில்லை.

அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்றும், அரசியல் மக்களுக்கு அதிகமான ஆதிக்கம், அதிகாரம் இருக்க வேண்டும் என்றும்ஏழை மக்கள் பேரால் கிளர்ச்சி செய்யப்படுகின்றதே ஒழிய இப்படிப்பட்ட ஏழைமக்களுக்கு இச்சீர்திருத்தத்திலோ, அல்லது போதாது என்று கேட்கப் படும் மற்ற சீர்திருத்தத்திலோ என்ன மார்க்கம் இருக்கிறதுஎன்பதுவிளங்கவில்லை.

ஆகவே புது வருஷம் இந்த கஷ்டத்திற்குஎன்ன செய்யப்போகிறது என்று புது வருஷவாழ்த்துக்காரர்களைக் கேட்கின்றோம்.

நிறக்க புது வருஷம் இந்தமாதிரிவேலையில்லாத் திண்டாட்டம் பட்டினி என்பதையே வாகனமாய்க்கொண்டுவந்திருக்கிறதுஎன்பதோடு மாத்திரமல்லாமல்லாமல் யுத்த கோஷம் என்னும் உருவத்தைக் கொண்டுவந்திருக்கிறது இப்போது உலகமெல்லாம் யுத்த கோஷமாகவே இருக்கிறது.

அன்பையும், தயாளத்துவத்தையுமே அடிப்படையாய்க் கொண்டது என்று சொல்லப்படும் கிறிஸ்து மதம் தாண்டவமாடும் தேசங்களே இப்போது யுத்த பேரிகையை முழக்குகின்றன.

யுத்த தளவாடங்கள் குண்டு, துப்பாக்கி, பீரங்கி, வெடிகுண்டு, யுத்தக்கப்பல், ஆகாயக் கப்பல், விஷப்புகை ஆகியவைகள் உற்பத்தி செய்வதில் முனைந்திருக்கின்றன.

கிறிஸ்து மதம் இதை பார்த்துக்கொண்டே இருக்கின்றன. கிறிஸ்துவும் இதற்கு ஆசீர்வாதம் செய்து கொண்டே இருக்கிறார்,

யுத்தத்தில் நாளைக்கு சாகப் போகும் மக்களுக்கு வீர சொர்க்கத்தில் இடம் ஏற்பாடு செய்யும் வேலையில் கடவுள் ஈடுபட்டு இருக்கிறார்போலும்.

ஆனால் நாளைக்கு யுத்தத்தின் பேரால் சாகப்போகும் மக்கள் யாரென்று பார்ப்போமேயானால் யாதொரு பாவமும் அறியாத ஏழைப்பாமர மக்களே 10 லட்சக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் சாகப் போகிறார்கள்.

யுத்தத்தில் யார் ஜெயித்தாலும் யார் தோல்வியுற்றாலும் ஏழை மக்களுக்கு ஒரே ஒரு பலன்தான் உண்டு அதாவது யுத்தத்தில் குண்டுக்கு இரையாகி உயிரைவிட்டு "வீர சொர்க்கத்துக்கு" போகவேண்டியது தான்.

ஆகவே இந்தக் கோலத்துடன் தான் 1935வது வருஷம பிறந்திருக்கிறது. இதற்குத்தான் மக்கள் வாழ்த்துக்கூறுகிறார்கள்.

சனாதனப் பார்ப்பனர் மகாநாடு

சென்ற வாரம் தஞ்சையில் சனாதனப் பார்ப்பனர்கள் மகாநாடு ஒன்று கூட்டப்பட்டு அதில் அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

“சனாதன தர்மத்தை நிலை பெறச் செய்யத்தக்க சுதேசி கைத்தொழில்களை ஆதரிக்க வேண்டும். சனாதன தர்மத்தை பாதுகாக்க ஒரு நிதி திரட்ட வேண்டும்.

குருகுலங்கள் ஆரம்பித்து புராணங்களை போதிக்க வேண்டும் பார்ப்பனர்கள் சமுதாயப் பழக்க வழக்கங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் விரோதமில்லாமல் நடக்க வேண்டும்.

பிராமணர்களுக்கு சாகுபடிக் கு சர்க்காரார் நிலங்கள் வழங்க வேண்டும் பிராமணர்களிடையே ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும்.

பிராமணர்களுக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க மற்ற ஜாதியார்கள் அடியில் கண்ட முறைகளால் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அ. திண்ணைப்பள்ளிக் கூடங்கள் வைக்கவேண்டும்.

ஆ. அறுவடையின் போது பிராமணர்களுக்கு தானியங்கள் கொடுக்கவேண்டும்.

இ. விசேஷ தினங்களில் பிராமணர்களுக்குச்சன்மானங்கள் வழங்க வேண்டும்.

ஈ. கிராமங்களில் பிராமணர்களைக்கொண்டு புராணக்காலக்ஷேபங்கள் செய்யவிக்கச் செய்யவேண்டும்.

உ. பிராமணர்களை ஆயுர்வேத வைத்தியர்களாக தர்ப்பித்து செய்து அவர்களிடம் வைத்தியம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஊ. பிராமணர்கள் லேவாதேவி தொழிலில் ஈடுபட வேண்டும்.

கூட்டுக்கமிட்டி அறிக்கை.

அ. கூட்டுக்கமிட்டி அறிக்கையில் இந்தியர்களில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் மத சுதந்தரமளிக்க வேண்டும்.

ஆ. மத சம்பந்தமான சட்டம் செய்வதில் வைசிராயுக்கும் கவர்னர்களுக்கும் பாதுகாப்புகள் இருக்கவேண்டும்.

இ. அவர்கள் சம்மந்தமில்லாமல் மத சம்பந்தமாக எந்த வித சட்டமும் கொண்டுவரக்கூடாது

ஈ. மத குருக்களின் அபிப்பிராயப்படி சர்க்கார் மத விஷயத்தில் நடக்க வேண்டும்.

உ. இந்து மதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யவேண்டும்.

ஊ. இந்துக்களை வேறு மதத்துக்கு விடக்கூடாது.

சாரதா சட்டம்.

இந்து மதப்பெற்றோர்களுக்கு விவாக விஷயத்தில் பூரண அதிகாரமிருப்பதால் சாரதா சட்டம் செல்லாது. ஆதலால் அதை ரத்து செய்து விட வேண்டும்.

சிறுவர் சிறுமிகளை 15-வயது வரை அயல் மதங்களைப்போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பக்கூடாது.”

என்பதாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்த மகாநாட்டுக்குத் தலைமைவகித்தவர் ஒருவக்கீலாயிருந்தவரும், ஜில்லாமுனிசீப்பு, ஜில்லா ஜட்ஜி ஆகிய உத்தியோகங்களில் இருந்து பென்ஷன் பெற்று விலகினவரும், சனாதன பார்ப்பனர் என்று தன்னை சொல்லிக்கொள்ளும் ஒரு பார்ப்பனராகும். இவரது அக்கிராசனப்பிரசங்கத்தில் பிராமணர்களுக்கு ஆங்காங்கு சங்கங்கள் இருக்க வேண்டுமென்றும்,

அடிக்கடி பிராமணர்கள் மகாநாடுகள் கூட்டி ஒற்றுமையுடன் இருந்து வேலை செய்யவேண்டும் என்றும்,

பிராமணர்களுடைய ஆசாரங்களை விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும்,

சமஸ்கிருதத்தை விருத்தி செய்ய வேண்டும் என்றும்,

இப்போது பிராமணர்களுக்கு ஏற்பட்ட வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிக்க எப்படியாவது முயலவேண்டுமென்றும்,

இதர சமூக நன்மையை கவனிப்பதில் பிராமண தர்மத்தை கைவிட்டு விடக்கூடாதென்றும்,

நீண்டகாலமாக பிராமணர்கள் முயற்சி கைகூடாமல் போய் விட்டது என்றும்,

பிராமணர்களுக்கு ராஜீய விஷத்தில் தோல்வி ஏற்பட்டதற்குக் காரணம் தக்க முறைகளை அனுஷ்டிக்காதது என்றும்,

அரசியல்சீர்திருத்தத்தில்மதம், சமூகம் ஆகியவைகளைப் பற்றி கவர்னர்களுக்கும், வைசிராய்களுக்கும் (எதேச்சாதிகாரம்) பாதுகாப்புகள் இருக்க வேண்டும் என்றும் எந்த சமயத்திலும் சனாதன ஆச்சாரம் கைவிடக்கூடாது என்றும் பேசியிருக்கிறார். இதிலிருந்து இந்த மாகாணத்தின் பார்ப்பனர்கள் நிலை என்ன என்பது ஒருவாறாகப் புலப்படலாம்.

அதாவது பார்ப்பனர்களுக்கு தனியாக ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டியது என்பதும், அந்த ஸ்தானத்தின் மூலம் பார்ப்பனர்களின் சனாதன தர்மம் என்பதாகிய வருணாச்சிரம தர்மம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதும், அதன் பயனாய் பார்ப்பனர்கள் சமூக வாழ்வில் உயர்வானவர்களாகவும், மற்றவர்கள் தாழ்ந்தவர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவும் (4-வது 5 வது ஜாதியார்களாய்) இருந்து வரும்படி செய்ய வேண்டியது என்பதும் முக்கிய தாற்பரியமாகும்.

இது மாத்திரமல்லாமல் அரசியலிலும் பார்ப்பனர்களின் உயர்வை பாதிக்கக் கூடிய எவ்வித சட்டமும் திட்டமும் ஏற்படாமல் வருணாச்சிரமப்படியே அரசியல் நடந்து வரவேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் பொருளாதார விஷயத்திலும் சரீரப்பாடுபடாமல் வாத்தியாயர், வைத்தியம், மற்ற ஜாதியார் தங்களுக்கு சன்மானம் வழங்குதல், லேவாதேவியின் மூலம் பாடுபடுகின்றவர்கள் செல்வத்தை உருஞ்சுதல் ஆகிய காரியங்களை மாத்திரம் செய்யவேண்டும் என்றும், தங்கள் ஜாதி மத உயர்வுக்கு உதவியான ஆசார

ணா. றா. னா. ணை.
லை. ளை. னை.

எழுத்துக்கள் மாற்றம்.

சென்றவாரம் பகுத்தறிவில் எழுத்தில் சீர்திருத்தம் என்று ஒரு சிறு உபதலையங்கம் எழுதி இருந்ததில் இவ்வார முதல்கொண்டு நமது பத்திரிக்கை பழய பெயராகிய குடி அரசு என்னும் பெயராலேயே வெளியிடலாம் என்று கருதி அதில் ண-ல-ள-ற-ன ஆகிய எழுத்துக்களை ணா-றா-னா-ணை-லை-ளை-னை என்கின்ற எழுத்துக்களை முறையே ணா-றா-னா-ணை-லை-ளை-னை என்று அச்சில் பிரசுரிக்கப்படும் என்பதாக எழுதி இருந்தோம் அந்தப்படிக்கே விஷயங்களை எழுத்துக்கோர்த்து இருந்தோம் எவ்வளவோ முயற்சி எடுத்தும் குடி அரசுக்கு இன்றுவரை போஸ்டல் உத்திரவு கிடைக்காததால் சனிக்கிழமை இவுவரை தந்தியை எதிர்பாத்தும் கடைசியாக இவ்வாரம் பகுத்தறிவு என்னும் பெயராலேயே பிரசுரித்து அனுப்ப நேர்ந்து. வாசகர்கள் விஷயத்தைப்படிக்கும்போது ணா-றா-னா என்கின்ற எழுத்துக்கள் வரும்போது அவற்றை ணா-றா-னா என்ற உச்சரிப்புப்போலவும் ணை-லை-ளை-னை உன்கின்ற எழுத்துக்கள் வரும்போது ணை-லை-ளை-னை என்ற உச்சரிப்புப்போலவும் உச்சரித்துக்கூட்டி வாசித்துக்கொள்ள வேண்டுமாய் கோறுகிறோம்.

இந்தப்படியே சில புஸ்தகங்களும் பிரசுரிக்க இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அனுஷ்டான பழக்க வழக்கங்களை கைவிடக்கூடாதென்றும் தீர்மானித்திருப்பதும் ஆகியவைகளையும் சேர்த்து பார்ப்போமேயானால் பார்ப்பனர்கள் அரசியல் சமூக இயல், பொருளாதார இயல் ஆகியவைகளில் தங்களுக்கு சகல விதத்திலும் ஆதிக்கம் இருக்கவேண்டுமென்பதும் சகலத்திலும் தாங்களே ஆதிக்கம் செலுத்தவேண்டியவர்களாய் இருக்க வேண்டும் என்பதே தான் பார்ப்பனர்களுடைய சங்கத்தினுடையவும், மகாநாட்டினுடையவும் லட்சியமாய் இருந்திருக்கிறது.

சுருங்கச் சொல்லவேண்டுமானால் புராணகாலத்திய ராமராஜியத்தையும், மநு தர்ம ராஜியத்தையும் விரும்புகிறார்கள் என்றும் அதற்கு ஏற்ற சூட்சிகளையே ஒரு கூட்டம் அரசியல் மூலமும், ஒரு கூட்டம்சமுதாயஇயல் மூலமும், ஒருகூட்டம் கல்வி இயல் மூலமும், ஒரு கூட்டம் காந்தியம் மூலமும் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

பார்ப்பனரல்லாத மக்கள் சிலரும் இதற்கு அடிமைகளாய் இருந்து ஆதரவு அளித்து வருகின்றார்கள் என்பது மாத்திரமல்லாமல் தாங்கள் ஏன் பார்ப்பனர்களாய் பிறக்கவில்லை. என்று விசனப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது.

இவ்வளவு அக்கிரமங்களில் இருந்தும், கொடுமைகளில் இருந்தும், சூட்சிகளில் இருந்தும் இந்நாட்டுப் பழங்குடி மக்கள் தப்புவித்து விடுதலை பெறுவதற்கு ஓரே ஒரு ஸ்தாபனம் தான் இன்று தென் இந்தியாவில் இருந்து வந்தது.

அதுதான் தென் இந்தியப்பார்ப்பனரல்லாதார் சங்கமாக இருந்து வந்தது. அதையும் சிலர் தங்கள் சுயநலத்துக்குகாக என்று பெருத்ததொரு துரோகம் செய்து அதில் பார்ப்பனர்களையும் கொண்டு வந்து புகுத்திக்கொள்ள சம்மதித்து விட்டார்கள்.

எனவே இப்போது முன் கூறப்பட்ட கொடுமைகளையும், சூட்சிகளையும் விளக்கிக் காட்டவோ, மக்களை அதிலிருந்து தப்புவிக்கச் செய்யவோ இன்று இந்திய பார்ப்பனரல்லாத மக்களுக்கு எவ்வித மார்க்கமும், சங்கமும் இல்லாமல் இருந்து வருகின்றது. அடிமை வாழ்க்கையில் ஆர்வம் கொண்ட மக்கள் அனேகருக்கு பார்ப்பனரல்லாதார் சங்கம் என்பதாகஒருசங்கம் இருப்பதேமிக்க கஷ்டமாகத்தோன்றுகின்றதாம். இவர்கள் உடலில் சுயமரியாதை ரத்தம் இருக்கின்றது என்று எப்படி சொல்லமுடியும்.

அன்றியும் இவ்வளவோடு அல்லாமல் மற்றொரு பார்ப்பனரல்லாத கூட்டத்தார் வருணச்சிரமத்தை ஆதரித்து அதைக்காப்பாற்றவும் பாடுபடுகின்றார்கள் என்றால் இவர்கள் சரீரத்தில் எந்த வித்தில் இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்த 20 நூற்றாண்டில் உலகத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் தொழிலில், செல்வத்தில், வாழ்க்கையில் சிறிது கூட உயர்வோ, தாழ்வோ அல்லது கூடக்குறைவான அனுபவமோ, தனி உடைமைப்பாத்தியமோ ஏதுவும் கொண்டாடக் கூடாது என்கின்ற தனிக் கொள்கைகள் ஆகியவைகளை கோடிக்கணக்கான மக்கள் அனுபவித்து வந்து கொண்டும், பிரசாரங்கள் செய்து கொண்டும் அதற்குத்தகுந்தபடி அரசியல், சமூகஇயல்களை அமைக்க முயற்சித்துக்கொண்டு இருந்து வரும இந்தக்காலத்தில் பார்ப்பனர்கள் வருணச்சிரமம்பேசுவதும் சில பார்ப்பனரல்லாதார் தங்களை பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள், 4வது ஜாதியா, 5வது ஜாதியார் என்று சொல்லிக்கொண்டு அவர்களது அடிமைகளாய் இருந்து வருவதோடு பாப்பனரல்லாத சங்கம் என்பதாக ஒன்று இருக்கக்கூடாது என்றும் சொல்லுவதும் என்றால் இந்த நாட்டை என்னநாடு என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இந்த நாட்டில் இன்று இந்த வெள்ளைக்கார பிரிட்டிஷ் அரசாங்கம் என்பது இல்லாமல் வேறு ஏதாவது ஒரு இந்திய அரசாங்கம் இருந்திருக்குமானால் இந்தக்கூட்டத்தார்கள் பார்ப்பனகல்லாத மக்களை என்ன கதிக்கு ஆளாக்கி எப்படிப்பட்ட நிலைமையில் வைத்திருப்பார்கள் என்பதை யோசித்துபார்த்தால் இந்தக் கூட்டத்தார் சொல்லும் சுயராஜ்யத்தின் யோக்கியதை என்ன என்பது நன்றாய் விளங்கும்.

சில பார்ப்பனர்கள் அரசியலின் பேரால் "சீர்திருத்தத்தில் கவர்னர், வைசிராய் ஆகியவர்களின் அதிகாரத்துக்கு பாதுகாப்புகள் கூடாது" என்பதும், அதே பார்ப்பனர்கள் சமூக இயலின் பேரால் தங்கள் தங்கள் நன்மைக்கு கெடுதிவராத அளவுக்கு கவர்னர் வைசிராய் ஆகியவர்களுக்குபாதுகாப்புகள் வேண்டும் என்பதும் அதே பார்ப்பனர்கள் கல்விஇயலின் பேரால் சமஸ்கிருதம், ஹிந்தி, புராணங்கள், இந்து வேதங்கள் ஆகியவைகள் கற்பிப்பதன் மூலம் மக்களை மடையர்களாக்கி பார்ப்பனர்களுக்கு பிறவி அடிமைகளாக ஆக்கி வைக்க வேண்டும் என்பதுமான காரியங்களே இன்று இந்நாட்டில் தேசியம், தேசாபிமானம், மத அபிமானம், பொதுநல சேவை ஆகியவைகளாய் திகழ்ந்து வருகின்றன.

இவற்றை நமது பார்ப்பனரல்லாத மக்கள் அறிந்து பார்ப்பன சூட்சியில் இருந்து விடுதலை பெற்று சுயமரியாதை அடைவது எப்படி எப்போது என்று கேட்கின்றோம்.

தொழிலாளர் மகாநாடு

சென்னை மகாண தொழிற் கட்சிக்காரியதரிசி கீழ்வருமாறு அறிவிக்கிறார்:—

இக்கட்சியின் வரவேற்புக்கமிட்டிக் கூட்டம் தங்கசாலைத் தெரு 327ம் நெ. சங்க கட்டிடத்தில் நேற்று மாலை 6மணிக்கு டாக்டர் பி. வரதராஜுலுநாயுடு தலைமையில் கூடியது. பலதிறப்பட்ட தொழிலாளர் சங்க அங்கத்தினர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். நீண்ட நேர விவாதத்திற்குப் பின் கீழ்க்கண்ட முடிவுகளைச் செய்தனர்:—

1. வரவேற்புக் கமிட்டித் தலைவா:—டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு.

2. மகாநாட்டுத் தலைவர்:—தோழர் வி. ஓ. சிதம்பரம பிள்ளை.

3. மகாநாட்டைஆரம்பித்து வைப்பவர்:—தோழர் ஈ. வெ. ராமசாமி

ஈரோடு-முனிசிபாலிட்டி சுகாதார பிரசாரவேலை

ஈரோடு முனிசிபாலிட்டியால் ஜனங்களுக்குப் பயனளிக்கக்கூடிய சுகாதார பிரசாரவேலை வருடம் பூராவும் செய்யும் பொருட்டு, சுகாதார பிரசார சபை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் சேர்மன் அவர்கள் பிரசிடெண்டாகவும், மூன்று கௌன்சிலர்கள், இரண்டு டாக்டர்கள், இரண்டு உத்தியோகஸ்தர் அல்லாத கனவான்கள், இரண்டுபெண்கள் கமிஷனர் ஆகியவர்கள் கொண்டஒருகமிட்டியும் சீனியர் சானிடேரி இன்ஸ்பெக்டர் அக்கமிட்டிகாரியதரிசியாகவும் இருந்து காரியம்நடத்துவார்கள். இதற்காக முனிசிபாலிட்டியிலிருந்தும், பொதுஜனங்களின் நன்கொடையிலிருந்தும் மூலதனம் ஒதுக்கி சினிமாக்காட்சி மூலம் பிரசார வேலைசெய்ய ஏற்பாடாகி இருக்கிறது. மெம்பர்கள் பெயர்களாவன:

பிரசிடெண்டு.

கான்சாஹிப் கே. ஏ. சேக்தாவுத்சாயபு.

மெம்பர்கள்.

தோழர்கள் வி. வி. சி. ஆர். முருகேசமுதலியார். பி. இராமநாதஞ்செட்டியார், மாரிமுத்து பண்டாரம் முதலிய கௌன்சிலர்களும், ஈ. வி. கிருஷ்ணசாமி நாயக்கர், எம். எஸ். முத்துக்கருப்பஞ்செட்டியார், முதலியதனிப்பட்ட கனவான்களும், டாக்டர்வர்கிஸ், டாக்டர் ராஜநாயகம் முதலிய டாக்டர்களும், தோழர்கள் ஈ. வி. லக்ஷிமியம்மாள் எஸ். பாலாம்பாள் முதலிய பெண்களுமாவார்கள்.

லெனின்

தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்க உறுப்பினர்களில் ஒருவராகிய அதிராம் பட்டணம் தோழர் வி. பி. இராமலிங்கம் அவர்கட்கு 14-12-34 இரவு ஆண்குழவி பிறந்தது. சங்கசாரபில் அக்குழவிற்கு லெனின் என்று பெயர் வைக்கப்பெற்றகு. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

விஸ்வகர்மமகாஜன சங்கம் பட்டுக்கோட்டை

இச்சங்கத்தின் வாராந்திரக்கூட்டம் 30-12-34 ஞாயிற்றுக்கிழமை கூடியது. கூட்டத்திற்கு தஞ்சை தோழர் கே. பஞ்சனாதபத்தர் அவர்கள்தலைமையின்கீழ்நாகரீகநாட்டின் நிலை என்பது பற்றி தோழர்கள் எம். நாடிமுத்துஆச்சாரி, கே. மாணிக்கபத்தர், ஆர். தங்கவேல் திருத்துரைபூண்டி, பக்கிரி சாமிபத்தர் ஷியூர் எம். ஆறுமுகம், கே. எஸ். சிவராமகிருஷ்ணன் பி. கே. நடேசபத்தர், கோவிந்தராஜலு தியாகராஜன் இவர்கள்பேசிமுடித்ததும் தலைவர்முடிவுரையுடன் கூட்டம் முடிவு பெற்றது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

இனாம்! இனாம்!!
"சஞ்சீவி சத்து"
காது நோய், பல்வலி, விஷப் புண்கள், விஷத்தடிப்பு, காலரா, பிளேக், அஜீர்ண பேதி, மாந்தம், பசியின்மை, வயிற்றுவலி, இருமல், மயக்கம், ஜுரம், மார்சளி, ஜலப்பு இன்னும் அனேக நோய்களை எளிதில் சொஸ்தப்படுத்தும் எமது 'சஞ்சீவி சத்து' பெரிய புட்டி ஒன்றை வாங்குவோருக்கு அழகிய கைகுட்டை ஒன்று இனமாக கொடுக்கப்படும். உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு நல்லகமிஷன்! ஆர்டருக்குமுந்துங்கள்.
பெரிய புட்டி விலை ரூ. 1-0-0
சிறிய " ரூ. 0-8-0
பண்டிட் வி. கே. கண்ணு பிள்ளை,
மலபார் மெடிகல் ஹால்
218, தங்கசாலை வீதி, சென்னை.

புதுச்சத்திர மகிமை.

மக்களின் மடமை.

(நந்தம்பாக்கம் தோழர் எஸ். முனுசாமி)

செங்கற்பட்டு ஜில்லா ஸ்ரீபெரும்புதூர்தாலூகா காணனூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த 3 மைல் தூரத்திலுள்ள புதுச்சத்திர கிராமத்தில் ஒரு சாமியார் (மகமதியர்) ஒரு மாத காலமாக இருந்து கொண்டு மக்களின் எல்லா பிணியையும், மருந்தில்லாமல் தீர்த்துவிடுவதாகச் சொல்லி இரண்டொருவர் பிணிகளையும் தீர்த்திருக்கின்றாராம். இவ்விஷயம் சுற்றுப்புற கிராமங்களிலும், முக்கியமாக செங்கற்பட்டு ஜில்லா முழுவதும், பாவி நோயால் பீடிக்கப்பட்ட பலரும், வறுமையால் வருந்தும் குருடர்களும், மக்கட்பேறற்ற இளங்குமரிகளும் ஆளுக்கோர் செம்பை எடுத்துக் கொண்டு சாமியாரைத் தரிசிக்கச் செல்லும் மக்களின் தொகையைக்கணக்கிட முடியாது. இதை செம்புத் தூக்கித் திருவிழா என்றும் சொல்லலாம். மேல்படி சாமியார் மந்திரம் ஜபிப்பதில்லையாம். அதிக பேச்சும் கிடையாதாம். அவர் அருகாமையில் ஒரு குளம் இருக்கிறது. அக்குளத்தில் முழுகி செம்பில் ஜலம் கொண்டு வந்தால், சாமியார் தனது இடது கைவிரல் இரண்டை அந்தச் செம்பில் வைத்து ஒரு தரம் வாயால் ஊதி அனுப்பி விடுகிறார். மேலும் ஜனக் கூட்டம் அதிகமாய் இருந்தால், சாமியார் பரணை மேல் இருந்து கொண்டு ஜனங்களை, செம்புகளை மேலே தூக்கிப் பிடிக்கச்சொல்லி கையை ஆட்டி விடுகிறார், உடனே அந்த செம்புத் தண்ணீரில் மருத்துவம் ஏறி விடுகிறதாம். இந்த ஜலத்தைக் குடிப்பதினால் அநேக வித வியாதிகளும் நீங்கி புத்திர சந்தானமும் உண்டாகிறதாம்.

இம்மகிமையைப் பார்ப்பதற்கென்றே நானும், எனது நண்பர்களும் 19-12-34-ல் புதுச்சத்திரம் போய் பார்த்ததில் அவ்விடத்தில் ஓர் மகிமையையும் காணவில்லை. மேலே சொன்னபடி ஜனங்கள் செம்புகளில் தண்ணீர் எடுத்துச் செல்லும் போது, சாமியார் தனது இடது கைவிரல் இரண்டை செம்பில் வைத்து வாயால் ஒரு தரம் ஊதி அனுப்பி விடுகிறார். இவர்களுடன் ஒன்றும் பேசுவதில்லை. இந்த அதிசயத்திற்காகத்தான் நம் பகுத்தறிவற்ற மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன், வியாதியஸ்தர்களையும், தொலை தூரங்களிலிருந்து மெய் வருத்தத்தையும் பாராது கட்டுச்சாத மூட்டை முடிச்சுகளுடன் வந்து கூட்டத்தில் ஒருவருடன் ஒருவர் இடிபட்டுக்கொண்டு தங்கள் குழந்தை குட்டிகளையும் பரிகொடுக்கின்றனர். (கூட்டத்தில் ஓர் குழந்தையும் நசுங்குண்டு இறந்து விட்டதாம்) பாமர மக்களின் கதிதான் இவ்வாறென்றாலோ, படித்தறிந்த மக்களும், மூடப்பழக்கங்களை கையாண்டு இச்சூழ்ச்சியில் சிக்குண்டிருப்பதும், அதிசயிக்கத் தக்கதே.

சகோதர சகோதரிகளே! தெய்வத்தன்மையினால் ரோகம் நிவர்த்தியாக முடியுமென்று மௌடீகமாகத்தான் மக்கள் எண்ணி எண்ணி மோசமடைகின்றனர். சகல வியாதிகளையும் தெய்வத்தன்மை நிவர்த்தியாக்க முடியுமானால், இப்பூ உலகில், எதுக்காக அநேக விதமான மூலிகைகளும், மருந்துகளும் உற்பத்தியாக்க வேண்டும்.

நோய்தீர்த்தலுக்காக வேண்டிய வைத்திய சாஸ்திரம் முதலியவைகளெல்லாம் பண்டைக்காலங்களில் இருந்தே உண்டாக்கி இருக்கப்படுகிறது. தெய்வத்தன்மையினால் ரோகம் தீருமானால், மருந்து பொருள்கள் ஒன்றும் வேண்டப்படுவதில்லையே இதை உணராமல்தானே நம் மக்கள், கானல் ஜலம்போல மோசம் போகிறார்கள். வியாதியஸ்தர்களுக்கு ரோகம் தீரவேண்டுமென்ற எண்ணத்தினால், மௌடீகக்கொள்கைகளை அனுசரிக்கிறார்கள். புதுச்சத்திர சாமியார், சகல ரோகங்களையும் அதாவது (தமிழ் வைத்தியமுறைப்படி, 4448 வியாதிகளையும்) தீர்த்து விடுகிறார் என்று பாமரஜனங்களின் சொல்லைக்கேட்டு நம்பி காசிக்குப்போய் கருமம் தீர்த்துக்கொள்ள எண்ணுவது போல் புதுச்சத்திரத்துக்கு யாத்திரையாகப் புறப்பட்டுவிட்டனர். எண்பது வயது பெரிய மனுஷி ஒருவரைக்கண்டு பாட்டி புதுச்சத்திரம் போகிறீர்களே எதற்காக என்று கேட்டதற்கு, கண்மங்கலாக இருக்கிறது ஏதோ போய்வந்தால் அப்போதாவது, தெளிவாகத்தெரியாதா என்றார்கள். பிறவிக்குருடனாக இருந்த ஒருவரைக் கேட்டதற்கு கண்ணமச்சலே தவிர வேறு பயன் ஒன்றும் இல்லை என்றார், எனது நண்பர் ஒருவருக்கு யானைக்காலாக இருந்தது. அவர் பத்து தினங்களாக போய் வந்தும் ஒரு நன்மையும் இல்லை. இப்படி எல்லாம் ரோகங்களை தீர்க்கும் ஒரு மகான் இருப்பாரானால் காணாதகடவுளை நம்புவதைவிட இவரையே கடவுள் என்று ஏற்றுக்கொள்ளலாமே.

இவ்விதமெல்லாம் ரோகங்கள் தீரவும், போகங்கள் பெருகவும், குழந்தைகள் பிறக்கவும், வயோதிகர்கள் வாலிபராகவும் புதுச்சத்திரம் சென்ற யாத்திரிகள் என்ன நன்மையடைந்தார்கள். ஒருவராவது பயன் அடைந்தது உண்மையாகுமா உண்மை இருப்பின் தக்க ஆதாரத்துடன் ரூபிக்க எவரேனும் முன் வருவீர்களா இது வாலறுபட்ட நரியின் கதையை ஒத்திருக்கிறதேயல்லாமல் வேறொன்று மில்லை. எனக்குத்தெரிந்தவரையில் சுமார் 1000, பேர்கள் வரை சென்றார்கள். அவர்கள் எப்போதும் போல் தான் இருக்கிறார்களே தவிர நூதன அந்தஸ்தை அடைந்த ஒருவராவது நான் காணமுடியவில்லை இவ்விஷயம் உண்மையாயின் இச்சாமியார் பூவுலகமக்களின் நன்மையைக்கருதி ஆங்காங்குள்ள பெரிய நீர்நிலைகளில் தனது இடது கைவிரல்கள் தேய்ப்பதையும் வாயினால் ஊதுவதையும் செய்து விடுவாரானால் ஆங்காங்குள்ள நோயாளிகள் அந்தந்த ஜலத்தைக்குடித்து கஷ்டமில்லாமல் தம் தம் ரோகங்களைதீர்த்துசுகமடைய மாட்டார்களா? இதை விட்டுவிட்டு ஒரே இடத்தில் இருந்து கொண்டு எல்லா மக்களையும் தொலைதூரத்தில் இருந்து வரச்செய்து அல்லர்ப்படுத்துவது நியாயமாகுமா என்பதைச்சற்று நிதான புத்தியுடன் யோசித்துப்பாருங்கள். அப்பொழுதுதெரியும் அவர் மகிமை. இப்படி எல்லாம் ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு மாயாவினோதப்பரதேசிகள் தோன்றி மக்களை மயக்கி அல்லல்படுத்துவதே வழக்கமாக இருந்து வருகிறது. இதற்குத் தக்க ஆதாரங்கள் அநேகம் இருக்கின்றன. ஒரு காரியத்தில் முன் பின் யோசியாமல் இறங்கி பின் தேவலம் அடைவது போதாதென்று பிறரை கஷ்ட மடையச் செய்து வேடிக்கை பார்ப்பதும் நம் நாட்டு மக்களின் வழக்கமாக இருந்து வருகிறது. நாம் இவ்வளவு எழுதினதிலிருந்து புதுச்சத்திரசாமியாரை குறைகூற வேண்டி எழுதினதாகஎண்ண வேண்டாம் மக்களின் மௌடீகப்போக்கையே தெரிந்துகொள்ள வேண்டும்.

எந்த மனிதனும் வைத்திய முறை இல்லாது ரோக நிவாரணம் செய்ததாகக் கூறினால் அதை ஏமாற்ற மென்றே சொல்ல வேண்டும். பிள்ளை வரம் கொடுக்க புருஷனுக்கேயல்லாது மற்றொருவருக்கு இருக்குமென்று நம்புவதானது எப்பேர்ப்பட்ட மோசமான நிலையாகும் என்பதைப் பகுத்தறிந்துப் பாருங்கள். பிள்ளை வரம் வாங்கிக் கொள்ளட்டும். பெண்ணை ஒரு கட்டிடத்தில் சிறை வைத்து விடுவோம். ஆடவர் அங்கு செல்லாதிருக்கட்டும் பிள்ளை உண்டாவதைப் பார்த்து விடுவோம் அப்படி பிள்ளை வரம் கொடுக்கும் தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் உடனே கர்ப்பத்தில் பிள்ளை உண்டாகி துள்ளும்படியாக ஏன் செய்து காண்பிக்கக் கூடாது. சரீரப் பிரகிருதியினால் மாதர்களுக்கு, ஆறு வித மலட்டுத்தனமும் ஆண்களுக்கு ஆண்மைக் குறைவினால் மூன்று வித மலட்டுத்தன்மைகளும் உண்டாகி விடுகிறது. இவர்கள் தேகா ரோக்கியத்திற்கு மருந்துகொடுக்காமல் எந்தக் கடவுளாலும் பிள்ளை கொடுக்க முடியாதென்றே மலை உச்சியினின்று மார்த்தட்டி துணிந்து கூற முடியும். இதை யறியாமல் மக்கள் வீணே பொருள் செலவும், அபகீர்த்தியும் அடைவானேன். இப்படிப்பட்ட மௌடீகர்களை சீர்திருத்த எண்ணி முன் வரும் அறிவாளிகளை நாஸ்திகர்கள் என்றும் கூச்சலிட்டு தாங்களே கடவுள் பிள்ளைகள் போல் முன் வருகின்றனர். முக்கியமாக இச்சம்பவத்தில், வியாபாரிகளுக்கும் வண்டிக்காரர்களுக்கும் லாபமே தவிர மற்ற ஜனங்களுக்கு யாது பயன்- அதுமாத்திரமல்லாமல் அங்கு எல்லா வியாதியஸ்தர்களுடன் இடிபட்டு, மிதிபட்டு அவ்வியாதிகளை விலையில்லாமலே தாங்களும் பெற்றுக்கொள்ளுகிறார்களே தவிர வேறொன்றையும் காணவில்லை.

சகோதர! சகோதரிகளே!! நம் நாட்டில் மூடப்பழக்க வழக்கங்களால் நடக்கும் அநியாயச் செயல்களுக்கும், ஏமாற்றத்தால் நடக்கும் அட்டூழியங்களுக்கும் அளவில்லை. உலகம் நாளுக்கு நாள் முன்னேறி வரும்போது நம்மை காட்டுமிராண்டிகளென எண்ணி பின்னே தள்ளக்கூடுமோ என்று பயப்பட வேண்டி இருக்கிறது. பிரபஞ்சத்தில் நடக்கும் வஞ்சக சூழ்ச்சிகளை அறியாது செம்பை எடுத்து திரிந்தால் இது அறியாமையும் கண்மூடித்தனமுமாகுமென்று யோசித்துப் பாருங்கள்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

மும், உலக அனுபோகமும் காட்டிக் கொடுக்கும் நன்னடக்கையைவிட நன்னடக்கை வரவேண்டுமானால் இதிகாச புராணங்களைச் சொல்லிக் கொடுப்பதினால் வந்து விடுமா?

நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிரகிருதியின் இரகசியங்களெல்லாம் மத சம்பந்தமான ஏட்டின் பாஷியமென்று கூறமுடியுமோ? புத்தர், ஏசு கிறிஸ்து, முகமது நபி நாயகம், ரிஷிகள் முதலியவர்களிடம் தோன்றிய ஞானத்தைக் கொண்டு ஷேக்ஸ்பியர், நியூட்டன், ஸ்பென்சர், எடிசன், போஸ், ராமன் முதலியவர்கள்வசிக்க முடியுமா?

ஏசு கிறிஸ்துவே கடவுள் குமாரர்; அவரே எல்லாருடையபாவ மன்னிப்பிற்காகப் பிறந்தார். அவரை நம்பாதவர்கள் பாவி; அஞ்ஞானிகள் என்று கிறிஸ்து மதம் சொல்லுகிறது. இஸ்லாம் மதத்தை நம்பாதவன் 'காபர், என்று இஸ்லாம்மதம் சொல்லுகிறது, கிறிஸ்தவர்களையும், மகமதியர்களையும் தொட்டாலும், நெருங்கினாலும் பாவம்; என்றும், இவர்கள் மிலேச்சர்கள் என்றும் இந்துமதம் சொல்லுகிறது. இந்த நிலைமையிலிருக்கும் மதங்களை கலாசாலை மாணவர்கட்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்கிற விதியும், சேர்த்தால், அடுத்த சீர்திருத்தத்தில்வைசிராய், கவர்னர்களுக்குக்கொடுத்திருக்கும் அதிக அதிகாரத்தோடு ராணுவ அதிகாரிகளுக்கும் கூட் ஐ. சி. எஸ். அதிகாரிகளுக்கும் அதிக அதிகாரம் கொடுத்துத்தானே ஆக வேண்டும். (தமிழ்நாடு)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பன தாசிமகன் அடிமை என்று தன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள் பார்ப்பான் பின் சென்று அதையே நிலைநிறுத்தமற்றவர்களையும் காட்டிக்கொடுத்தார்கள் என்பதில் என்ன அதிசயமிருக்கிறது. அவமானமென்ன?

ஒரு ஜாதிக்கு இன்னொரு ஜாதி தாசி மகனென்று கூறுவதுசரியா? அப்படி இருக்குமா? ஒரு ஜாதிக்கு இன்னொரு ஜாதி அடிமையாக விருக்குமா? அது சரியா? இவைகள் சாஸ்திரங்களிலிருப்பது சரியா? ஒழுங்கா? இதைக் கடவுள் சொன்னார்- என்கிறீர்களே அது நீதியா. அப்படிச் சொல்லியிருப்பாரா? அப்படியானால் அக்கடவுள் எத்தன்மையானவர்? அதை நம்பி ஒத்துக்கொண்டு அந்த மந்திரங்களினால் தான் உலக நன்மை, தீமைகளும் மோட்சமும் சித்திக்குமென்பது நியாயமா? உண்மைதானா? என்கிற விஷயங்களை கல்வி கற்பதற்கு தடையில்லாமல் கல்வியும், அறிவும் வியாபித்திருக்கும் இந்த நூற்றாண்டில் ஆலோசித்துப்பார்க்காத ஜனங்கள் தேசீயமென்னும் புரட்டைத் தெரிந்து சுயராஜியத்தில் சமபங்கோடு எப்படிவாழ முடியும்?

புத்தியுடையவன் புத்தியில்லாதவனை ஏமாற்றுவான் இவனை தனக்கு எவ்வளவுதூரம் அனுகூலப்படுத்திக் கொள்ள வேண்டுமோ அவ்வளவும் செய்வான் அதற்குப் பின் இவன் தலையிலும் கையை வைப்பான் இது எத்தனையோ நடந்து வருகிறதல்லவா?

நானும் ராஜகோபாலாச்சாரியாரும் கவர்னராவோம் என்று சத்திய மூர்த்தி அய்யர் சொன்னவாயில் சாமிவெங்கடாசலம் செட்டியார், அவனாசிலிங்கம் செட்டியார் கவர்னராவார்கள் என்று சொல்ல வரவில்லையே அவர் சொன்னபடி கவர்னர் வேலை வருவதானால் பார்ப்பனர்களுக்கே கொடுக்கக்கூடாது மற்ற சமூகத்துக்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவதே ஜஸ்டிஸ் கட்சியாகும்.

போளூர் சமதர்மப்பிரசாரம்.

31-12.34ந்தேதி காலை 10-மணிக்கு தோழர்கள காஞ்சி முத்து கிருஷ்ணன் புதுப்பாளையம் பி. ஆர். குப்புசாமி காஞ்சிபுரம் நாஸ்திக சி. கே. குப்புசாமி ஆகியவர்கள் திருவண்ணாமலையிலிருந்து வந்து சேர்ந்தனர். அன்று மாலை 4-மணிக்கு பேட்டைக்குள் மைதானத்தில் சமதர்ம வாலிபர் சங்க ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டியது. கூட்டத்திற்கு சுமார் 500 ஜனங்கள் கூடினர் தோழர் ம. ம. சிதம்பரன் வந்திருந்தவர்களையும், தலைவர்களையும் வரவேற்று கூட்டத்திற்கு டேனிஷ்மிஷன் பெண் பாடசாலை தலைமை ஆசிரியர் தோழர் தேவசகாயம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார் தலைமை வகித்து முன்னுரையாக சிலவார்த்தைகள் பேசினார் தோழர் சி. கே. குப்புசாமி அவர்கள் அகில உலக தொழிலாளர் முன்னேற்றம் என்பது பற்றி பேசினார் அக்கிராசனர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

சீர்திருத்தத்திருமணம்

25-1.35ந்தேதி பாண்டிச்சேரி அ. இராமசாமி ஆச்சாரி அவர்களின் மூத்தப் புதல்வி சௌ. பட்டம்மாளுக்கும், கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியில் உத்தியோகம் வகிக்கும் கே. பிரம்மச்சாரி எம். எ. எல். டி. அவர்கட்கும் பெண் கிரகத்தில் விவாகம் நடைபெறும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தஞ்சை ஜில்லா 4 வது சுயமரியாதை மகாநாடு.

தஞ்சை ஜில்லா 4 வது சுயமரியாதைமகாநாடு வருகிற 19-20-1-35ல் தஞ்சையில் கூடுவதற்கான முயற்சிகள் நடந்து வருகிறது. இந்த மகாநாட்டில் சுயமரியாதை எதிர் கால வேலைத்திட்டங்களை நிர்ணயிக்க வேண்டியிருப்பதால் மகாணத்தில்பல பாகங்களிலுமுள்ள சுயமரியாதைத் தோழர்கள் விஜயஞ் செய்யக் கோருகிறது என் கே. ஆர். ஜி. பால் எழுதுகிறார்.

சுயமரியாதைச் சங்கம் மதுரை.

சங்க அங்கத்தினர்களின் வருடாந்திரப்பொதுக்கூட்டம் நாளது 6-1-35 வருஷம் (மார்கழி மாதம்22) ஞாயிற்றுகிழமை மாலை 4மனிக்கு சங்கக்கட்டிடத்தில் (53 கீழ்வெளி வீதி) நடைபெறும். சென்ற 9-12-34ந் தேதி யன்று போடப்பட்டிருந்த விஷயங்களைப்பற்றி தீர்மானிக்கப்படும். சென்ற மாதத்திய கூட்டம் அங்கத்தினர்களுடைய சௌகர்யத்தைக்கருதி ஒத்திவைக்கப்பட்ட தென்பதை ஞாபகப்படுத்துகிறோம். என ஷை சங்கக்காரியதரிசிகளான தோழர்கள் பி. வி. விநாயகமூர்த்தி, எ. வேணுகோபால் முதலியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

காலண்டர்கள் வரப்பெற்றோம்.

1935ம் வருடத்திய காலண்டர்கள் கீழ்கண்ட கம்பெனியாரிடமிருந்து வரப்பெற்றோம் அவைகள் மிக அழகாகவிருக்கிறது. அவர்களுக்கு நமது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். சென்னை கெல்சன் கம்பெனியார், ஈரோடு சிவலிங்க விலாஸ் புக்டிபோ, ஈரோடு வெள்ளிப்பாத்திரம்— நகைவியாபாரி! தோழர் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள். ஈரோடு சில்க் வியாபாரி பி. இராமநாதஞ்செட்டியார் அவர்கள்.

ஒயிட்ஸ் பஸ்பம்.

பாதரசத்திலல் தயாரிக்கப்பட்டது. மூத்திர சம்பந்தமான வெள்ளை வெட்டை ரணம் உள் மூலம் வெளி மூலம் ஆப்ரேஷன் இல்லாமல் குணத்திற்கு உத்திரவாதம். 12-வேளை மருந்து ரூ. 1—2—0 வீ. பி. சார்ஜ் வேறு.

ஒயிட்ஸ் வைத்திய சாலை,
அம்மாபேட்டை சேலம்.

South Indian Celebrities. Vol 1

"தென்னாட்டுப் பிரமுகர்கள்"

(ஆங்கிலத்தில்)

(ஆசிரியர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல் அட்வகேட்.)

தமிழ்நாட்டுத் தலைவர்களான கனம். பி. டி. ராஜன், டாக்டர் சுப்பராயன், எஸ். முத்தையா முதலியார், சர். ஆர். கே. ஷண்முகம், திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார், டாக்டர் நடேசமுதலியார், முத்துலட்சுமி முதலியவர்களது அழகிய திருவுருவப்படத்துடன் (ஆப்டோன் பிளாக்குடன்) அவர்களது ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும், வேலைத் திறன்களைப்பற்றியும வெகு அழகாகவும், சித்தரிக்கும் எளிய நடையிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. ஆங்கிலம் படித்த பிராமணரல்லாத ஒவ்வொருவரும் படித்து, அனுபவித்து ஆனந்திக்க வேண்டிய இன்றியமையாத நூல். மாணவர்களுக்கு மகிழ்ச்சி தரும் மாபெரும் விருந்து. ஜஸ்டிஸ் கட்சிக்காரர் ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருத்தல் வேண்டும்.

விலை ரூ. 1.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு விலை 12 அணா.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

தேவர் செய்த புரட்சி.

ா தூதனில் கேசரி எழுதியதின் குறிப்புகள்.

தோழர் பி. ரெத்தினவேலுத்தே
ருக்கு ஜே! அன்னாரை காங்கிர
சேர்த்து ஞானஸ்நானம் செய்
த்ததாக பெருமையடித்துக்கொள்
ம் பிரம்ம புத்திரர்களுக்கு, ஜே!
அ-ம்-ம-ா-டி! கடைசியாக தோழர்
வர் சட்டசபை மெம்பராகி விட்
ார்! போட்டி இல்லை; திசாநாதன்
சத்திலிருந்து வருகிறான். யாரே
ம் போட்டி போட்டிருந்தால்—
த அபேட்சகர்கள் எந்தக்கட்சி
ன் சார்பில் நின்றாலும்—ஜாமீன்
ாகையையும் இழக்க வேண்டிய
லைமைதான் ஏற்பட்டிருக்கும்.

தோழர் தேவர் ஜஸ்டிஸ்கட்சிவீரர்.
ன்றைக்கும் திருச்சிதெ
னிந்திய நலவுரிமைச்
கத்தின் உபதலைவராயிருந்து
ருகிறார். ஜஸ்டிஸ் கட்சியை விட்டு
ர்விலகிக்கொள்ளவுமில்லை; வில
படவுமில்லை. இன்று காலை 9ம
க்குக்கூட, தன்னுடைய நண்பர்க
டன் தோழர் தேவர்நடத்தியசம்பா
ணை; "ஜஸ்டிஸ் கட்சியை சீர்படு
வழிஎன்னா?" என்பது பற்றித்
ன். ஆகவே ஜஸ்டிஸ் கட்சியில்
ருக்குப் பிடித்தமிராவிடினும்,
ன் ஜஸ்டிஸ் கட்சி அல்ல என
சால்ல மாட்டார்—சொல்லவும்
டியாது. அந்தப்பித்து அவருக்கு
ம்போடு ஒட்டியபிணி.

அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி
ர்தானா காங்கிரஸ் சிங்கமாகப் புக
படுகிறார் என்றா கேட்கிறீர்கள்?
ம், அதே தேவர்தான். அவர் மாஜி
ஸ்டிஸ் கட்சிக்காரர் என்றோ,
ழைய ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என
ா அழைக்க இங்கு இடமில்லை.
ாழர் தேவரிடம் சிநேகம் கொண்
ருக்கும் படேபடே ஆசமி முதல்,
டி தேவதைகள் வரை ஜஸ்டிஸ்
சிப்பிடாரிகளாக இருந்து வரும்
ாது தேவர் அவர்களைத்தாண்டிச்
ல்ல முடியுமா?

ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்
க் கட்சி என்பது பெரிய ஜாதிக்
ரர் பிரசாரம். இதை ஒரு
கையில் ஏற்றுக்கொள்ளுகிறேன்.
னால் ஒரே ஒரு கேள்வி? தோழர்
த்தியமூர்த்தி தனது ஈரோடு பிரச
கத்தில், "நானும், ராஜகோபாலாச்
ரியும் கவர்னராவோம். இதை
புங்கள்" என்று சொல்லியிருக்
ரே இது காங்கிரஸ்காரர்களின்
த "வேட்டை"யைக் குறிக்கிறது.
தோழர் சத்தியமூர்த்தி சூதுவாதில்
த வெள்ளைப்பேச்சுக்காரர். அத
ால்தான் அறையில் நடந்த பேச்
ச அம்பலத்தில் இழுத்துவிட்டார்.
தரங்க நோக்கத்தை வெளியிட்ட
ர்த்திக்கு வந்தனம். சட்டசபை
ணுகும்போதே தென்னாட்டுகாங்கி
ரஸ்காரர்களின் உத்தியோக மோகம்
இப்படி மண்டைக்கேறி விட்டது.
1926ல் சுயராஜயக் கட்சியின் வகை
யறா போல் தோழர் சத்தியமூர்த்தி
வகையறா சட்டசபைக்குள் நுழைந்
திருந்தபோது, அவர்கள் உத்தியோக
விபசாரம் செய்து பினாமி மந்திரி
சபைக்கு உயிர் அளித்து, மூனி மூக்
காட்டோடு காசு சம்பாதித்த கதை
யை தமிழ்நாடு மறந்து விடாதென்
பது தேசபக்த பிரம்மகுலத்தவர்கள்
தெரிந்திருக்க வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சியில் எவ்வளவு முற்
போக்கான நோக்கமும், பரந்த கொ
ள்கையும் இருந்த போதிலும் ஜஸ்
டிஸ் கட்சி என்றால் அந்த வகுப்பு
வாத தேசோத்தார சிகாமணிக்கு
வேப்பங்காய்தான். ஜஸ்டிஸ் கட்சி
அழிந்து விட்டதென்று வைத்துக்
கொள்ளுவோம். அக்கட்சியார் எல்
லோரும் காங்கிரசில் சேர்ந்து விட்டா
ர்களென்றும் வைத்துக் கொள்ளு
வோம். அப்புரம் நடப்பதென்ன?
காங்கிரசில் இருப்பவர்கள் எல்லோரு
மேகாந்தியாகவில்லை அதுபோலவே
ஜஸ்டிஸ் கட்சியிலிருப்போர் அத்
தனை பேரும் பொப்பிலி ராஜவல்ல.
விபசாரி பதிவிரதா தர்மத்தை உப
தேசிப்பதற்குச் சமமானது.

ஜூலை மாதமுதல், தோழர்தேவர்
திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி
அங்கத்தினராக இருந்து வருகிறார்.
அந்த ஹோதாவில் தான் திருச்சி
தாலூகா காங்கிரஸ் கமிட்டி தோழர்
தேவரை சட்டசபைக்கு நிறுத்த
வேண்டுமென்று சிபார்ஸ் செய்தது.
இதிலிருந்து காங்கிரசில் சே
ர்ந்துக்கொள்ளும்படி தேவர் கேட்
டார் என்பதும், புதிதாக அவர் காங்
கிரசில் சேர்ந்து விட்டார் என்பதும்
தப்பு என்று சொல்லவேண்டியதிருக்
கிறது. ஜஸ்டிஸ் கட்சியிலிருப்போ
ருள் எத்தனையோ பேர் இன்றைக்
கும் காங்கிரசில் இருக்கிறார்கள்.
அந்த ஜாப்தாவைச்சேர்ந்தவர்களுள்
நானும் ஒருவன்.

என்ன இருந்தாலும் இந்த உப
தேர்தலில் தோழர் தேவர் காங்கிரஸ்
அபேட்சகராக நின்றது எனக்குக்
கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. காங்
கிரஸ் நிபந்தனை பாரத்தில் இவர்
கையெழுத்துப்போட்டது. அனாவ
சியம் என்பதும் என் அபிப்பிராயம்.
ஜஸ்டிஸ் கட்சியின் பேராலும் அவர்
நின்றிருக்கப்படாது என்பதும்
எனது கருத்து. இப்படி ரெண்டுங்
கெட்டான் அபிப்பிராயத்தை எதற்
காகத்தெரிவிக்கிறேன் தெரியுமா?
ஜஸ்டிஸ் மந்திரிசபை திருச்சி முனி
சிபல் கவுன்சில் சம்பந்தமாய் பெரிய
தவறைச்செய்திருக்கிறது. இதனால்
தோழர் தேவர் ரொம்ப அலகழிவுக்
காளாகியிருக்கிறார். இந்த யோக்ய
தையில் தோழர் தேவர ஜஸ்
டிஸ்கட்சியின் சார்பாக நின்றால்,
அந்த மந்திரிசபை செய்த தவறை
நியாயமென்று ஒப்புக்கொள்வதாக
முடியுமல்லவா? எனவே, அவர் இந்த
ரெண்டு கட்சி டிக்கெட்டிலும் நிற்
காமல் முனிசிபல் பிரச்சினையை
முன் நிறுத்தி சொந்த டிக்கெட்டில்
நின்றிருந்தால் ரொம்பபேஷாய் இரு
ந்திருக்கும்.

ஆகவே தோழர்தேவர் இந்த இட
த்தில் கொஞ்சம் தவறு செய்து விட்
டார் என்பது என் அபிப்பிராயம்
நனது தேர்தல் அறிக்கையில் (எலக்
ஷன் மானிபெஸ்டோவில்) ஜஸ்டிஸ்
மந்திரி சபையை ரொம்ப வேகமாகத்
தாக்கியிருக்கிறார். தேர்தல் அறிக்
கையில் ஜஸ்டிஸ் மந்திரிசபை திரு
ச்சி முனிசிபாலிட்டியின் பேரில்
படையெடுத்து திருச்சி வாசிகளின்
பிரஜா உரிமையைப் பிடுங்கிவிட்டதா
கவும். அது பெருத்த அக்கிரமம்
என்பதை நிலை நாட்ட பொது ஜன
ங்களின் தீர்ப்பை இத்தேர்தலின்
மூலம் வெளிப்படுத்த விரும்புவதாக
வும் எழுதியிருக்கிறார். வாஸ்தவம்.
அந்த மந்திரிசபை செய்தது பெரு
த்த அக்கிரமந்தான். ஆனால் முனிசி
பல் பிரசினையின் பேரில் பொது
ஜனங்களின் தீர்ப்பை அறிவதற்குக்
காங்கிரசில் சேர்வதா நியாயம்? காங்
கிரசில் சேராமல் முனிசிபல் பிரச்சி
னையின் பேரில் மட்டும் தோழர்
தேவர் அபேட்சகராக நின்றிருந்தால்
அவர் சொல்லுவதும், கேட்பதும்
பொருந்தும்.

தேவர் எந்த நிறத்தோடு அபேட்ச
கராய நின்றாலும்—இவரோடு வேறு
எப்பேர்ப்பட்டவர் எந்தக்கட்சியின்
சார்பாய் போட்டியிட்டாலும் பிர
யோஜனப்படாது. வெற்றி தேவரு
க்குத்தான் ஏற்படும். இப்போது
செய்தது இவரது தனிப்பட்ட கௌ
ரவத்தில் கொஞ்சம் பாதிக்கப்பட்டு
விட்டதென்பது எனது தீர்ப்பு சொ
ந்த டிக்கெட்டில் நின்றிருந்தால் இவ
ரது கவுரவம் அதிகப்பட்டிருக்கும்.
இப்போது, தேர்தலில் ஜெயிப்பத
ற்காகவே இவர் காங்கிரசில் சேர்ந்
தாரென்றும், அதனாலேயே இவர்
ஜெயிக்க முடிந்ததென்றும் வெளியூர்
காரர்கள் நினைக்கும்படி ஏற்பட்டு
விட்டது.

இன்றுள்ள நிலைமையில் ஜஸ்டிஸ்
கட்சிமீது ஆத்திரங்கொண்ட காங்கி
ரஸ்காரர்களுக்கு தோழர் தேவர் ஒரு
சிறந்த தேவ விக்கிரகமாக விளங்குகி
றார் மூல விக்கிரகங்களைப்போல
இவ்விடத்திலேயே விட்டுவிடாமல்,
உற்சவ விக்ரஹத்தைப்போல கொ
ண்டாடப்பார்கிறார். பொதுக்கூட்
டங்களுக்கும் மகாநாடுகளுக்கும் இவ
ரை அழைத்துச்சென்று, "இவர்
தான் தேவர், ஜஸ்டிஸ் கட்சியை உத
றிவிட்டுவந்த வீரர்" என்று ஜனங்க
ளுக்குக் காட்டிக்கொண்டு வருகிறார்
கள். இந்த பூஜா நிறைவேத்தியங்கள்
ஜஸ்டிஸ் கட்சியை திட்டுகிறதற்கா
கத்தான் பயன்படுத்தப்படுகிறதென்
பது யாருக்கும் தெரியாமல் போகாது.
தோழர் தேவர் காங்கிரஸ் நமூ
னாவில் கையெழுத்திடமாட்டார்
என்று காங்கிரஸ் பிரஜாபாத்தியதை
க்காரர்கள நம்பிக்கை கொண்டு, அங்
தச்சாக்கில் தாங்களே காங்கிரஸ்
அபேட்சகராக நிற்பதற்கு ஆசை
வைத்திருந்தார்கள். அந்த ஆசையில்
பக்காசேர் மண் விழுந்தது. இப்
போது அவர்களுக்குள்ள வயிற்றெரி
ச்சல் வாய்விட்டுச் சொல்லமுடியாது.
இந்தவகையில் தோழர் தேவர் ராஜ
தந்திரமாக நடந்துகொண்டது அவ
ரது வாழ்நாளில்இதுவே முதலாவது
தடவை.

தோழர் தேவர் இந்தத்தடவை
ரொம்பப்பாலிஷாக நடந்து கொண்
டார் எனக்கேள்விப்படுவோர் வெகு
ஆச்சரியப்படுவார்கள். எனக்கு மட்
டும் இந்தத்தேர்தலில் வருத்தங்கல
ந்தசந்தோஷமே. "நகரதூதன்"

ஓர் பிரபலஸ்தர் மரணம்.

திருவாரூர் வக்கீல் டி. கே. ராம
சாமி நாயுடு டிசம்பர் மாதம் 23-ந்
தேதி இரவு காலமானார். 23-ந்தேதி
கோர்ட்டுக்குப் போய் வந்து வழக்கம்
போல் சாப்பிட்டுப்படுத்தவர் 3 மணி
க்கு எழுந்து ஜலபாதைக் கழித்து
விட்டு வந்து படுத்தார். சில நிமிஷ
ங்களில் குளிர்வதாகச் சொல்லிபோ
ற்றும்படி சொன்னார். அடுத்த நிமி
ஷத்தில் மாறடைப்பால் காலமா
னார்.

இவர் கீழத்தஞ்சை ஜில்லாவில்
ஓர் பிரபல வக்கீல். திருவாரூர் நகர
சபையில் இருமுறை நியமன அங்க
த்தவராயும், ஒரு முறை நியமனத்
தலைவராயும், இருமுறைத் தேர்தல்
தலைவராயும் இருந்து நல்ல தொண்
டாற்றியிருக்கிறார்.

இவர் இவ்வூர் கோவாப்ரேடிவ் பா
ங்கு தலைவராகவும், காரனேஷன்
காரியதரிசியாகவும் இருந்திருக்கி
றார். நன்னிலம் தாலூகாவில் முதல்
நியமன அங்கத்தவருமாவார். 1930-
ல் நன்னிலம் தாலூகா சுயமரியாதை
மகாநாட்டுத் தலைவர். இவர் பிரி
வால் பிராமணரல்லாதார் உலகம் ஓர்
அரிய தலைவரை இழந்தது. இவரு
டைய இரு சகோதரர்களில் நாகை
அபிஷியல் ரிசீவராக இருந்த டி.
ஆர். விஜயராகவலு நாயுடுகாரரா
என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மரணம்.

ஈரோடு டிப்படி சூப்ரெண்டு தோ
ழர் தி. இராஜூப்பிள்ளைஅவர்கள் தந்
தையார் தோழர் சோ. நாயனாப்பிள்
ளை 29-12-34-ந்தேதி மரணமடைந்
தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

மலையாளம் சில்க்

2¼-வீதி. 5-நீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-நீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமல்போனாலும்ஒருவரை ஒருவர் குறை சொல்வதில் பின்வாங்கார்கள்.

சிங்கப்பூரில் ஜப்பானியர்சங்கமொன்றிருக்கிறது. அதில் ஓர் சட்டம் நிறைவேற்றப் படுமேயாகில் அரசாங்கம் உடனே தகுந்த பரிகாரமளிக்கிறது.ஆனால் நம் நாட்டிலோ அல்லது நமமவருக்கோ அப்படிஒன்றும் சாதிக்கப்படுகிறதில்லை. சுயமரியாதைக் கொள்கை மதத்தையோ, அல்லது கடவுளையோ திட்டவந்த இயக்கமில்லை, பொருளாதாரத்தையும், ஒழுக்கத்தையும்,ஜாதிப்பாகுபாடில்லாதிருக்கவேண்டுமென்பதையும் கூறினது. இதைச்செவியுற்ற மதஸ்தர்கள் எங்கள் மதம் அதைத் தடுக்கிறது, எங்கள் கடவுள் இதை மறுக்கிறதென்று கூறியபடியால் தான் அதையும் ஒருகை பார்த்து விடத்தான் வேண்டுமென்று சொல்லிற்று. அனேகர் ஆரம்பத்தில் சு. ம. கொள்கையை எதிர்த்தனர். இருந்த இடம் தெரியாதாக்கி விட வேண்டுமென்று என்னென்னவோ செய்தனரென்றாலும் இப்பொழுதுஅதையே ஆதரிக்க முற்படுகின்றனர் ஏன்? முதலில் அதன் நோக்கத்தையும், கோட்பாட்டையும் தெரியாத படியால் தான் பண்டை காலத்திய மனிதன் சூரியன், இடி, மின்னல், பூகம்பம் போன்ற இயற்கையின் சம்பவங்களைக் கண்டு பயந்தான். காட்டில்வாழும் யானை, சிங்கம், புலி போன்ற மிருகங்களையும் கண்டு பயந்தான். கடலையும், ஆற்றையும் கூடக் கண்டு பயந்துதானிருக்க வேண்டும். ஆகவே இந்த இயற்கை சம்பவங்களைக் கடவுள், சாமி, பூதம், காட்டேரி முனியாண்டி, சுடலைமடையான் போன்ற சாமிகளின் கோவத்தால் தான் நடைபெறுகின்றனவென்று கருதிக் கோழியை விருப்பமாகப் புசிப்போன் கோழியையும், ஆட்டைப் பிரியமாகப் புசிப்போன் ஆட்டையும், மாட்டைப் பிரியமாகப் புசிப்போன் மாட்டையும், மரக்கறி பதார்த்தம் புசிப்போன் மரக்கறி பதார்த்தத்லதயும் பொன், வெள்ளி, தங்கம் போன்ற பொருள்களையும் வைத்துப் பூஜை பண்ணிக் கோபத்தை அடக்கி விடலாமென்று எண்ணினான். இன்னும் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் பராக்கிரமம் பொருந்திய மனிதனையும் சாமியாகவேவணங்கி வந்தான்- இன்றைய கோவில்கள் கட்டப்பட்டிருக்கும் இடங்களெல்லாம் புதைகுழியே யாகும். சூரியன் ஓர் ஆண் மகனென்றும், சந்திரன் ஓர் பெண் மகளென்றும் கற்பனைக்கதைகள் எத்தனையோ எழுதியிருக்கிறார்கள். இடிச் சப்தம் கேட்கும் போது எத்தனைமக்கள்அர்ச்சுனா! அர்ச்சுனா!! என்றுஇன்னும் கூறுகிறார்கள். ஆனால், இன்றைக்கும் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக சூரிய-சந்திரன், ஆண்-பெண்ணென்ற மடமையை நீக்கியதுடன் சூரிய-சந்திர மண்டலங்களுக்கும் பிரயாணமாக ஏற்பாடு செய்தனர்-செய்கின்றனர்.

நேற்று நடந்த பீகார் பூகம்பத்தைக்கடவுளின் சட்டளை என்று சொன்னார்கள் அதிலும் ஓர் வர்ணாச்சிரமி ஆதிதிராவிடர்களைக் கொடுமைப் படுத்தியதினால் தான் பூகம்பம் வரலாயிற்று என்றுசொன்னார்.ஆனால் நாங்கள் (சு. ம.க்காரர்) என்ன சொல்கிறோமென்றால் ஆதிதிராவிடரின் நன்மைக்காகக் கடவுளால் தோற்றுவித்த அப் பூகம்பத்தில் ஒன்று மறியாத ஆதிதிராவிடர்களும், சின்னஞ்சிறு குழந்தைகளும் ஏன் மாண்டனர்? ஆலயங்களும் ஏன் தரை மட்டமாகினர்? தேர்தல்களிலும், ஆலயங்களிலும், மசூதிகளிலும், சாதுக்கள் தலையிலும் ஏன் இடி விழுகின்றனர்? ஒருக்கால் இனி அவை கடவுளுக்கு வேண்டியதில்லையோ? என்று- சுயமரியாதைககாரர்களாகிய நாங்கள் கேட்டு விட்டால் போதும் நாஸ்திகப் பட்டமும், கடவுளை நிந்திப்போனென்றும்குபத்தறிவற்றவைதீகர்கள் கூப்பாடு போடுகின்றனர். என், அரசாங்கத்திற்கும் மனுச் செய்து விடுகின்றனர். இந்தக் கூச்சலுக்கும், அரசாங்கததின் பயமுறுத்தலுக்கும் பயந்து நாங்கள் ஒரு போதும் விட்டு விட மாட்டோமென்பது உறுதி,பூகம்பம், இடிகளைமறுப்பதற்கென விஞ்ஞானிகள் தகுந்த ஏற்பாடுகள் செய்கின்றனர் ஆகவே இனிக் கடவுளின் கோபத்திற்கு பயப்படவோ, அஞ்சவோ வேண்டியதில்லை. சிக்காகோ நகரத்தில் ஓர் ஸ்த்தம்பம் நாட்டியிருக்கின்றார்கள். அதனுல் அந் நகரத்தில் இடி விழுந்ததே கிடையாதாம்.

ஆலயங்களிலிருப்பது வெறுங்கல் என்றாலும் அதன் வழிப்பாட்டிற்காகத் தடியடியும், மண்டையுடையும், கத்திக் குத்தும், உயிர் சேதங்களும் கணக்கிலடங்கா. மதத்தின் பெயரால் ஒரு மனிதன் கூட கோபுரம், மாட மாளிகையில் ஏராளமான சொத்துடன் பஞ்சணைமெத்தையில் சோம்பேறித்தனமாக நித்திரைபோகவும், கால் நோவாது உயர்தர பூட்ஸ்களை மாட்டிக்கொண்டு மோட்டாரில் பிரயாணமாகவும், அதே மதத்திலிருக்கும் இன்னோர் மனிதன் மாத்திரம் ஒண்டக் குடிசையின்றி, படுக்கப்பாயின்றி, உடுத்த உடையின்றி, உண்ண உணவின்றிக் கஷ்டப்பட்டு-உழைப்பின் கொடூரத்தால் பச்சத் தண்ணீரில்லாது வாடி வதங்கி மண்ணிற் சாய்வானே யாகில் அந்த மதமும் அதன் கோட்பாடும் அரசாங்கமும் வேண்டாமென்றுதான் நாங்கள் சொல்லுகிறோ'' மென்று கூறி முடித்தார்.

பிறகு, சுயமரியாதை சங்கத்தின் தலைவர் தோழர் ஜி. குமாரசாமி அவர்கள் பேசியதும் தலைவர் முடிவுரையாகப் பெண்களைக் கூட்டங்களுக்குத் தவறாது அழைத்து வரவேண்டுமென்றும், தொழில் பாகுபாட்டால் தான் ஜாதிகள் வருக்கப்பட்டதேயொழிய ஆரியர் மனுதர்ம சாஸ்திரத்தில் எழுதி வைத்திருப்பதைப்போல் ஆண்மகனாகில் பிர்மாவின் முகத்தில், புஜத்தில், துடையில், பாதத்தில் ஜெனித்தார்களென்பது சுத்தப் பொய்யென்றும் உதாரணமாக இன்றைய காங்கிரஸ்காரர்கள் பாரதமாதா படம் ஒன்று செய்து அதற்கு நாலு கைகளிருப்பதாக வர்ணித்துள்ளார்களே நம்மில் யாராவது இவ் விருபதாம் நூற்றாண்டில் பார்த்ததுண்டா? இல்லவே இல்லை. ஆகவே பண்டைய விஷயங்களும் சுத்தப்பொய் என்றும் பிறவியின் காரணமாக ஜாதிகள் ஏற்படவில்லை என்றும் ஓர் யானை ஓர் பூனையை அல்லது குதிரையை விவாகம் செய்தால் இல்லறம் நடத்த முடியாதென்றும் ஆனல் ஓர் ஆதிதிராவிடனுச்கு ஓர் பார்ப்பனப் பெண்ணை விவாகம் செய்வித்தால் இல்லறம் நடத்தி விடலாமென்றும் ஏன்? இன்றைக்கும் நடந்திருக்குதென்றும் கூறி முடித்தார். பிறகு, கௌரவஉபக்காரியதரிசி தோழர் சி. எஸ். குமாரசாமி அவர்கள் வந்தனம் கூறக் கூட்டம் 6மணிக்கு இனிது முடிந்தது. என ஷை சங்கக் கௌரவ காரியதரிசி எழுதுகிறார்.

கொச்சியில் சமபந்தி போஜனம்.

இங்கு 15 தினங்களுக்கு முன் இறந்தவராகிய கோஹர்வக்கோ என்பவரைக் குறித்து ஷை சமபந்தி போசனம் நடந்தேறியது. ஷையார் கோஹர் என்ற பெரிய வக்கீலினிடம் குமாஸ்தாவாக யிருந்த ஓர் கத்தோலிக்கர் ஆவார். அவர் கிறிஸ்தவமதத்தில் பிறந்தவராக இருந்தும் அதில் உள்ள சூழ்ச்சிகளையும், பாதிரிமார்கள செய்யும், இழி செயலையும் கண்டு, அம் மதத்தில பற்றற்றவராக, வேறு பல மதங்களையும் இயன்றவரையும் ஆராய்ந்தும், ஒன்றிலும், சம்மதமில்லாதவராக சென்ற 15 ஆண்டுகளாக யாதொரு வேலையுமின்றி வீட்டை விட்டு வெளியே போகாமல் இருந்து வந்தார் அவருக்கு நான்கு குமாரர்களும், சிலகுமாரத்திகளும் உண்டு. அவர்களுள் மூவர்பகுத்தறிவுவாதிகள் ஆவார்கள். ஷையார் இறக்கும் தருவாயில் நான் இறந்தால் என்னை கிறிஸ்தவர்கள் முறைப்படி என்னை அடக்கம்செய்ய வேண்டியதில்லை என்று சொல்லியிருந்தார். ஆதலின் இங்குள்ள பகுத்தறிவுவாதிகள், அன்னாரின் உடலை தகித்தார்கள். அதனைக்கருதியேஷை சமபந்தி போஜனம் நடைபெற்றது. தோழர்கள்இதில் யுக்தி வாதிபத்திராதிபர் எம். சி ஜோசப் சகோதரன்,
பத்திராபர் கே. அய்யப்பன், கேச
தேவ், டாக்டர் பாப்புனி, டாக்ட
தையில், வக்கீல் சச்சித், சி
ராம ஐயர், ஆதிமூலன் இனனு
பிரபல மதப் பற்றுளர்களாகிய கிழ
ர்கள் பலரும் வெளியூர்களிலிருந்
வந்து கலந்துகொண்டது போற்ற
தக்கது ஷை சமபந்தி போசனத்
ற்கு சுருங்கக் கூறின் பல சாதி ம
ஸ்தர்களும் சேர்ந்துகொண்டார்கள்
சுமார் நூறு பேருக்கு மேலாக ஆண்
களும், பெண்களும் கலந்துகொண்
னர். போஜனம் முடிந்ததும், தலை
ர்கள் இச் சம்பவத்தைக் குறித்
பல மேற்கோள்களுடன் உபந்யசி
தார்கள். சுமார் 2-30 மணிக்கு
யல் அவர்களால் வந்தனம் கூறப்
ற்று முடிந்தது. இடை இடை
புகைப்படம் எடுக்கப்பட்டது எ
ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

பாதிரிகள் முல்லாக்கள் ஆடைகளுக்கு தடையுத்திரவு

துருக்கி சர்க்கார் உத்திர

பொது ஜனங்களிடையே ம
தலைவர்கள் தங்கள் "குருமா
(மதச்சின்ன) ஆடைகளில் வ
கூடாதென்று துருக்கி சர்க்கார் உ
திரவிட்டிருக்கிறது மத சம்ப
மான சடங்குகளில் ஈடுபடும் போ
தான் அத்தகைய ஆடைகளை அ
யாலாமென்றும், பொது ஜனங்க
டை இருக்கும்போது சாதார
ஆடையே யணிய வேண்டுமென்
அவ்வுத்திரவு கூறுகின்றது.

மகமதிய குருமாாகள், ஆர்மீனி
ர்கள், ரோமன் கத்தோலிககர்க
பிராட்டெஸ்டெண்டுகள், யூத குரும
கள் ஆகியவர்களுக்கும் இந்த உ
திரவு போடப்பட்டிருக்கிறது.

திருத்துரைப்பூண்டி யூனிட்டி கிளப்.

29-12-34-ந்தேதி மாலை 5 ம
க்கு ஷை சங்கத்தின் கூட்டமொன்
தோழர் எம். வேலதயன் தலைவ
யில் கூடி கீழ் கண்ட தீர்மானங்
நிறைவேற்றப்பட்டன.

1. சங்கத்தின் பிரவேசக் கட
ணம் நான்கணாவாகக் குறைக்க
ண்டுமென்று கொண்டு வந்த தீர்
னம் நிறைவேறியது.

2. சங்கத் தலைவர் வெங்கி
சலத்தால் ஓர் இலவச இரவு ப
சாலை ஏற்படுத்த வேண்டுமென்
தீர்மானிக்கப்பட்டது. அதாகு
ண்டிய சாதனங்களை இன்னும்
மாதத்திற்குள் செய்து கொடுப்ப
அங்கத்தினர்களால் ஒப்புக்கொள்
பட்டது என்று காரியதரிசி எ
கிறார்.

மலாய் நாடு

தோழர்கள்சிதம்பரம்-ரெங்கம்மாள் அவர்களுக்கு பாராட்டு.

மூவார் தனவைசிய நண்பர்களால் ...-12-34 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குக் கலப்புமண தம்பதிகளான தோழர் சிதம்பரம் ரெங்கம்மாள் அவர்களை மலாக்காவில் இருந்து அழைத்து வரப்பட்டு புக்கிட் திரோ பி. கு. ரா. வீரப்பசெட்டியாரவர்கள் பங்களாவில் வரவேற்று உணவளிக்கப்பட்டது. விருந்தில் ஆண்களும், பெண்களுமாக சுமார் 100 பேர்கள் வரை கலந்துகொண்டார்கள். அப்பால் 4-30 மணிக்கு தம்பதிகளைப்பாராட்டி உபசரிப்பதற்கு முன் ஏற்பாட்டின்படி, இந்திய சன்மார்க்க சங்கக் கட்டிடத்தில் இவ்வூர் நகரசபை அங்கத்தினர் ...யர் திருவாளர் பெ. ராம. செல்லப்ப செட்டியாரவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் கூட்டப்பெற்றது. சுமார் 400 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தனர். அக் கூட்டத்திற்கு தலைவர்களும் தம்பதிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்ததும் தோழர் சு. சொ. இராமசாமி செட்டியாரவர்களால் வரவேற்று கரகோஷத்தினிடையே மூவருக்கும் மாலை அணிவிக்கப்பெற்று புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டது. அப்பால் அவரவர்கள் ஆசனத்திலமர்ந்ததும் இந்திய சன்மார்க்க சங்க பள்ளிக்கூட ஆசிரியரால் அமைத்த தம்பதிகளின் வாழ்த்துப் பாட்டையும், பாரதியார் கீதங்களும் மாணவிகளால் இனிமையாகப் பாடப்பெற்றது. பிறகு தலைவரவர்கள் ...—"சகோதர சகோதரிகளே, தோழர்கள் சிதம்பரம் ரெங்கம்மாள் தம்பதிகளைப் பாராட்டி உபசரிப்பதற்காக கூடியிருக்கும் இக் கூட்டத்திற்கு இன்றுஎன்னை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு நான் சந்தோஷமடைகிறேன். நண்பர்சிதம்பரம் அவர்கள் பொதுவாக உங்கள் எல்லாருக்கும் தனவைசிய சமூகத்தார்களுக்கும் நன்கு அறிமுகமானவர் என்பது நான் உங்களுக்கு சொல்ல வேண்டுமென்பதல்ல. தனவைசிய சமூகத்திலுள்ள கட்டுப்பாடான வழக்கங்களில் சிலவற்றை உடனே நீக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும் ஆனல் அவ்விதம் செய்வதற்கு இனி எதிர்கால இளைஞர்களால் தான் முடியுமென்று நம்புகின்றேன் அவ்விதஇளைஞர்களுக்குபேராதரவு அளித்து ஊக்கம் காட்டுவதற்கு அறிகுறியாக தமது நண்பர் சிதம்பரம் அவர்கள் முன்னணியில் இருப்பதற்கு சந்தோஷமடைகிறேன். அவருக்கு துணைவியாக அமைந்திருக்கும் தோழர் ரெங்கம்மாள் அவர்கள் திருத்த ஆர்வங் கொண்டவர்கள். ...க்கையின் நலங்கருதி சமூக வழக்கத்தை சிறிதும் பொருட்படுத்தாது கலப்பு மறுமணம் செய்து கொள்ள முன்வந்ததைப்பாராட்டுகிறேன். கூட்டத்தில் நாம் எல்லோரும் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்." எனச்சொல்லி அமர்ந்ததும் தோழர் பழ. வ. அழகப்ப செட்டியார் அவர்களால் உபசாரப் பத்திரம் வாசித்து அளிக்கப்பெற்று மாணவன் செ. செல்லப்பன் "விதவா விவாகம்" என்பது பற்றியும் தோழர் வெ. வீர. லெட்சுமணன் செட்டியாரவர்கள் தம்பதிகளைப்பாராட்டியும் பேசினார்கள். பிறகு பதில் கூறுமுகத்தான் தோழர் ரெங்கம்மாள் அவர்கள், பெண்களை அடிமையாக்கி ஆண்டு வரும் ஆண்களின் மனப்பான்மை மாற்றமடைந்து பெண்சமூகத்திற்கு விடுதலையளிக்க வேண்டுமென மிக அழகாகப் பேசினர்கள். அப்பால் தோழர் சிதம்பரம் அவர்கள் ஜாதி, பால்ய விவாகம், கலப்புமணம், விதவா விவாகம் சமூகக் கட்டுப்பாட்டு மூடப்பழக்க வழக்கங்கள் இளைஞர்களின் முன்னேற்றம் முதலியன பற்றி சுமார் 1½ மணி நேரம் அரியதொரு பிரசங்கம் செய்தார்கள். இடையிடையே சொந்த நிகழ்ச்சிக் குறிப்பும் எகத்துக் காட்டியது சபையை மிக மகிழ்வித்தது. பிறகு சு. ப சு. கோவிந்தன் செட்டியாரவர்களால் வந்திருந்தோரனைவருக்கும் நன்றி கூறப்பட்டு இரவு 7 மணிக்குக் கூட்டம் இனிதுநிறைவெய்தியது. செட்டியார் முக்கியஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களும், பெண்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (நிருபர்)

தேவந்திரகுல வாலிபர் மகாநாடு.

கரூர் தாலூகாமுதலாவது தேவேந்திரகுலவாலிபர் மகாநாடு 28-12-34 ந்தேதி பகல் 12 மணிக்கு மோகனூர் தோழர் எம். பி. கந்தசாமி தலைமையின் கீழ் தோட்டக்குருச்சி கிராமத்தில் நடைபெற்றது மகாநாட்டுக்கு வெளியூரிலிருந்து முக்கிய பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

தோழர் ராசிபுரம் எம். முத்து மகாநாட்டை பெருத்த கரகோஷத்தினிடையே திறந்து வைத்தார். பிறகு வெளியூர் பிரதிநிதிகளாகிய தோழர்கள் ஒரு பந்தூர் கே. முத்துசாமி, எம். பி. பெரியசாமி, எம். கே மருதமுத்து, எம். பி கருப்பையா, எஸ். கே. கந்தசாமி, வெங்கட்ராவ்மூப்பனார்முதலியவர்கள் முறையே மது விலக்கு,நமதுசமூக நிலைமை, நாகரீகம், தீண்டாமை, கல்வி, சுகாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றி மிகவும்உறுக்கமாகப்பேசினார்கள்.

தோழர்களான சுப்பம்மாள், செல்லம்மாள் பெண்கள் சுதந்திரம் என்பது பற்றி மிகவும் விமரிசையாக பேசிய பின் சில முக்கியமான தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஆதிதிராவிடர் கூட்டம்

வட ஆற்காடு ஜில்லா வந்தவாசி தாலூக்கா பொன்னூர் ஆதிதிராவிடர்களின் பொதுக்கூட்டம் 15-12-34 தேதி மாலை 5½ மணிக்கு பொன்னூர் ஆதிதிராவிடர் பொது தெருவில் நடைபெற்றது. அவ்வமயம் வேம்பட்டு எம். முனிசாமி அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு ஆதிதிராவிடர்பிறமுகர்களனைவரும் வந்திருந்தனர்.

மேற்படி கிராமப்பாடசாலை தலைமைஆசிரியர் தோழர் இ. மாரிமுத்து அவர்கள் கூட்டத்தின் அவசியத்தைப்பற்றியும், அதனுல் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் விரிவாகப்பேசிமுடித்தார்.

பின் கூட்டத்தின் தலைவர் எம். முனிசாமி அவர்கள் "இந்திய சட்டசபை தேர்தல்" என்பதுபற்றி மிக விளக்கமாகப்பேசினார்.

பின்கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கென இந்திய சட்டசபையில் நியமிக்கப்போகும் ஸ்தானத்திற்கு தாழ்த்தப்பட்டவர்களின் உண்மைத்தலைவர்களான டாக்டர் அம்பேத்கர் அவர்களையும், கோவை திரு. ஆர். வீரையன் அவர்களையும் இந்தியசட்டசபையில் பிரதிநிதிகளாக நியமிக்க வேண்டுமென்று மேன்மை தங்கிய வைஸராய் அவர்களையும், சென்னை கவர்னர் அவர்களையும் இம்மகா சபைக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

பின்பு வந்தனோபசாரம் கூறி இரவு 8 மணிக்குக்கூட்டம் இனிது கலைந்தது என வந்தவாசிதாலூக்கா ஆதிதிராவிட சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

பெரியகுளம் தாலூகா கம்ம வாலிபர் மகாநாடு அம்பாசமுத்திரம்

அம்பாசமுத்திரத்தில் 19-12-34ல் பெரியகுளம் தாலூகா கம்ம வாலிபர் மகாநாட்டின் ஐந்தாவது ஆலோசனைக் கூட்டமும், காரியக்கமிட்டிக் கூட்டமும், பிரசாரக் கூட்டமும் சிறப்புடன் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு உத்தமபாளையம் பாரதி ஆசிரியர் ரா. நாராயணசாமி தலைமை வகித்தார். கடவுள் வணக்கம், தேச வணக்கம், நாட்டு வணக்கம் முதலியவை மாணவிகளால் பாடப்பட்டது. தலைவர் முகவுரைக்குப்பின் பல தோழர்கள் பலவிஷயங்களைப் பற்றிப் பேசினார்கள்தலைவர்முடிவுரைகூறியதும் வந்தனோபசாரத்துடன்கூட்டம் கலைந்தது என ஒருநிருபர் எழுதுகிறார்.

நாடார் மஹாஜன சங்கம் மதுரை ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் 3-வது லாட்டரி.

அபிமானிகளுக்கோர் வேண்டுகோள்!

இப்பவும் சென்ற 10-12-34ந் தேதியில் பிரைஸ் எடுப்பதாக இருந்ததை, விற்பனையானபுஸ்த்தகங்களை பலர் இன்னும் அனுப்பிவைக்காதபடியும், வெளிநாடுகளில் உள்ள அபிமானிகள் இன்னும் சிறிது காலம் பிரைஸ் தேதியை தள்ளிவைக்கும் படி கேட்டுக் கொண்டதாலும் 10-12-34ந் தேதியில் கூடிய கவுன்சில் மீட்டிங்கில் ஷை 10-12-34ந்தேதியைமாற்றி 1935ம் வருஷம் ஏப்ரல் மாதம் 12ந்தேதி கட்டாயம் பிரைஸ் எடுத்துவிடுவதென்றும் விற்பனையான புஸ்த்தகத்தையும், தொகையையும் 10-4-35ந் தேதிக்குள் எல்லோரும் அனுப்பிவைத்து விட வேண்டுமென்றும் ஷை 10-4-35ந்தேதிக்கு பின் வரும்அடிக்கட்டைகளை பிரைவில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாதென்றும் தீர்மானித்திருக்கிறது.

நாளது பங்குனி மாதம் 30ந்தேதி(1935ம் வருஷம் ஏப்ரல் மாதம் 12ந்தேதி) கண்டிப்பாய் பிரைஸ் எடுக்கப்படும் ஷை தேதியில் தவராமல் பிரைஸ் எடுப்பதற்காக வேண்டியபல வழிகளிலும், பிரபல ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகிறது. நகர் பகுதிகளில் உள்ள பிரபல வியாபாரிகளும், முக்கியஸ்த்தர்களும், லாட்டரிசீட்டை வெற்றியுடன் நடத்திவைப்பதற்கான முழுப் பிராயத்தனங்களுடன் சீட்டு விற்பனைசெய்து வருகிறார்கள். ஏப்ரல் மாதம் 10ந்தேதிக்கு பின்வரும் அடிக்கட்டைகளை பிரைவில் சேர்த்துக்கொள்ளபடமாட்டாது.

ஆகவே கல்வி நலம் கோரும் கனவான்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற சீட்டுகளைப்பெற்று லாபத்தை அடையும்படியும், புஸ்த்தகங்கள்விற்பனை செயும் அபிமானிகள் உடனே அடிக்கட்டைகளையும் தொகையையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். எனபொதுகாரியதரிசிகள்எழுதுகிறார்கள்.

சிறுவர் அறிவுக்கதிர்
வெளியாகி விட்டது.
பாடசாலை மாணவர் மாணவிகளுக்கு ஒரு சிறந்த மாதாந்தரப் பத்திரிகை.
வருஷசந்தா உள் நாடு 0-10-0
,, வெளி நாடு 1-0-0
K. J. வேதமுத்து,
தமிழ்ப் பண்டிதர் L. M.
போதனு முறைப் பாடசாலை
ஈரோடு S. I. R.

சென்னைமகாண எல்லா விதத் தொழிலாளர் சங்கங்களுக்கும் வேண்டுகோள்.

—0—

சென்னை மாகாணத்தொழிலாளர் சங்கங்களை அபிவிருத்திச் செய்து தொழிலாளர் இயக்கத்தைப்பலப்பட செய்யவும், பிரிட்டிஷ் பார்லிமெண்டு கூட்டுக்கமிட்டி அறிக்கையை பரிசீலனை செய்யவும் 30-12-34ல் திருச்சி பீபிள்ஸ் பாங்கியின் கட்டிடத்தில் திருச்சி, பொன்மலை முதலிய தொழிலாளர் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் பொங்கல் விடுமுறை நாட்களில் சென்னை மாகாணத்தொழிலாளர்மகாநாட்டைபொன்மலையில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு அடியில் கண்டதோழர்களை வரவேற்புக் கமிட்டியாராக தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேற்கண்டமகாநாடு கூட்டும் காலமானது வெகு சமீபத்திலிருப்பதாலும் நமது மாகாணத் தொழிலாளர் இயக்கத்துக்கொரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டி இருப்பதாலும், மகாநாட்டைத்திறம்பட நடத்திவைப்பதற்கு ஒருதலைவரைத்தேர்ந்தெடுக்கவேண்டி இருப்பதாலும் நமது சென்னை மகாணத்திலுள்ள எல்லாவித தொழிலாளர் சங்கங்களும் தங்கள் குறைகளையும் அபிப்பிராயங்களையும்தெரிவிக்கச்செய்வதுடன் மேற்படிமகாநாட்டைத்திறம்படநடத்திவைக்க தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி ஒத்துழைக்கும்படி வேண்டப்படுகிறது. பின் கீழ்கண்டவர்களை நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. வரவேற்புத்தலைவர் டி. கிருஷ்ணசாமி, பொதுக்காரியதரிசி டி. வி. கே. நாயுடு, உதவிக்காரியதரிசிகள் ஏ. சுப்பையா, என். எஸ். கோவிந்தசாமி, டி. என். சுந்தரமூர்த்தி, பொக்கிஷதார் பி. எல். தண்டபாணி ஆபீஸ் பொன்மலை யிலேயே இருப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு கிளைச்சங்கங்களுக்கு வேண்டுகோள்

செங்குந்த மித்திரன் ஆசிரியர் தோழர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் எழுதுகிறார்

நமது ஐந்தாவது மகாநாடு நாளது தை மாதம் 13, 14 ம்நாட்களில் நடைபெற உறுதி செய்யப்பெற்று வேலைகள் வெகு தீவிரமாய் நடை பெற்று வருகின்றன.

தலைச்சங்கத்தின் ஆறாவது பொதுக்கூட்டம் இம்மகாநாட்டின் இரண்டாம் நாள் பகல் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. சமர்ப்பிக்கப் படவேண்டிய தலைச்சங்க அறிக்கையில் கிளைச்சங்கங்களின் முழுவிவரமும் ஒவ்வொரு கிளைச்சங்கமும் 15-1-35க் தேதிக்குள்கிடைக்குமாறு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செங்குந்தர்கள் பொதுவாகத் தங்கள் வருட விடுமுறையாகக் கருதி ஓய்வு கொள்ளும் சமயத்தில், அதாவது பொங்கலின் பின் சில நாட்களுக்குள் இம்மகாநாடு நடக்கப்போவதால் செங்குந்தர் பெருங்கூட்டமாகத் திரண்டு வரக்கூடுமெனவரவேற்புக் கழகத்தினர் நம்புகின்றனர். ஆங்காங்கிருந்து வரும் செய்திகளும் இதனை வலியுறுத்துகின்றன. ஆகவே, ஐயாயிரம் பிரதிநிதிகள் வரையில் தங்குவதற்கான இட வசதி செய்ய வரவேற்புக்கழகத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்.

தென்னிந்திய நல உரிமைச்சங்கம் விருதுநகர்.

தலைவர்கள் மகாநாடு கூட்ட யோசனை.

இதற்கு முன் "தமிழ் நாடு" "பகுத்தறிவு" முதலியவைகளில் அறிவித்தபடி விருதுநகர் தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தின் பொதுகூட்டம் ஒன்று 30-12-34 ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு நாடார்பரிபாலனசங்ஹாலில் கூடிற்று. சங்கபிரஸிடெண்டும், முனிசிபல் சேர்மனுமானதோழர் வே. வ. ராமசுவாமி அவர்கள் அக்கிராசனம் வகித்தார். எல்லா மெம்பர்களும்ஆஜராயிருந்தனர் புது வருஷத்து உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

1. சென்ற இந்திய சட்டசபைத் தேர்தலுக்குப் பின் ஜஸ்டிஸ் கட்சியின்பலம் குன்றியிருப்பதால், அதை புனருத்தாரணம் செய்து கட்டுப்பாடான வேலை ஆரம்பிக்கவேண்டும் என்ற உணர்ச்சி மாகாண முழுமையுள்ள கட்சி அபிமானிகளிடம் பலப்பட்டு வளர்ந்து வருவதைத் தலைவர்கள் கவனித்திருந்தும், இந்த உணர்ச்சியை ஒன்று திரட்டவேண்டியவேலையை அவர்கள் இதுவரை ஆரம்பிக்காதது கண்டு இச்சங்கம் கண்டிக்கிறது.

2. நமதுகட்சியைப் புனருத்தாரணம் செய்வதற்காக தலைவர்கள் ஒருங்குகூடி வேண்டிய சாதனங்களை நிர்ணயம் செய்வதற்காக, கட்சியில் உள்ள பிரபல தலைவர்களைக்கொண்ட "ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்கள் மகாநாடு" ஒன்று விருதுநகரில் சீக்கிரம் கூட்ட இச்சங்கம் முடிவு செய்கிறது.

3. இரண்டாவது தீர்மானத்தை தலைவர்களுக்கு அனுப்பி வேண்டிய நடவடிக்கைகள் நடத்த நமது சங்கத் தலைவருக்கு இக் கூட்டம் அதிகாரமளிக்கிறது.

மேலே கண்ட தீர்மானங்களை ஒட்டி முனிசிபல் கவுன்ஸிலர்களான தோழர்கள் கூ. சம்பந்தம், கூ. பொ. மகாலிங்கம் ச. மாரிமுத்து; ப. மூ. அ. நாராயணன், சி. உத்தண்டன் முதலியவர்கள் பேசினார்கள். மகாநாடு சீக்கிரம் கூட்டவேண்டும் என்ற அபிப்பிராயத்தை எல்லோரும்பலமாகஆதரிப்பதுடன் துரிதமான கிளர்ச்சிகளும் நடைபெறுகின்றன. பின் தலைவர் முடிவுரைக்குப்பின்வந்தனோபசாரத்துடன்கூட்டம்கலைந்தது.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

"சமதர்மம்."

ஆசிரியர்:—வி. பார்த்தசாரதி

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழிக்க இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டினை [illegible] முதலிலைக் கருதும் நல்லோர்களாகவும் ஆக்கும் கருத்துக்களை கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர், "சமதர்மம்" ஜோலார்பேட்டை.

"நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.
ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும், அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர், "நகர தூதன்" உறையூர், திருச்சி.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ்ப்பத்திரிகை.
இருவாரத்திற்கோரு வெளியீடு

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணா 1.
விலாசம்:—
மானேஜர், "தமிழன்" ஆண்டர்சன் பேட்டை போஸ்டு கோலார் தங்கவயல்

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ் கோட்ரோட், நாகர்கோவில்

ஏஜண்டுகள் தேவை.

நமது 'பகுத்தறிவு' வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொன்மலை
2. சிவகங்கை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.
6. பெரையார்
7. கோட்டார்

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடியஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.
மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு.

மனித உற்பவம்.

இது தோழர் ம. சிங்காரவேலு எ. பி. எல். அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இவைகள் [illegible]ற்ப காப்பிகளேயிருக்கின்றது. வேண்டியவர்கள் உடனே எழுதிப் பெற்றுக்கொள்க. விலை 8 அணா
22, சவுத்பீச், திருவல்லிக்கேணி, சென்னை.

பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பேர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

நான் சமசயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடிஅரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

"மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்,

லிமிட்டெட், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் ப்ராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)
விலை அணா 8.

லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் விலை அணா 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.
விலை அணா 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணா 8.

இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால், மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ்சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.
விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது. விலை அணா ½.

மநுநீதி விளக்கம்.

இது மநுதர்ம சாஸ்திரம் என்பதில் உள்ள சூட்சிகளையும், கொடுமைகளையும் விளக்குவது. விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி

பண்டிதர் மகாவித்வான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இதில் அகத்தியர் என்பதாக ஒருவர் இருந்ததாகச்சொல்லுவது உண்மை அல்ல என்றும் அந்தப்படி ஒரு அகத்தியர் இருந்திருக்க முடியாது என்றும் தமிழ் சங்கங்கள் என்று சொல்லப்படுபவை கூட இருந்திருக்க முடியாது என்றும் சரித்திர ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டதாகும். விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்.

இது வடலூர் ராமலிங்க சுவாமி என்பவரால் சமதர்மத்தை ஆதரித்துப்பாடிய பாட்டுகள். விலை அணா 2.

விவாக விடுதலை.

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அட்வகேட் அவர்களால் எழுதப்பட்டது. இது நமது "இந்து"ப் பெண்களுக்கு விவாக விடுதலையின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் அது சம்மந்தமான சாஸ்திரஏற்பாடுகளையும், சட்டங்களையும் விளக்குவதுமாகும். மிகவும் ஆராய்ச்சித்திறம் கொண்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மேல் நாட்டுப் பிரயாண உருவப்படமும், மதிப்புரையும் கொண்டது. விலை அணா 0—4—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.